மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 11 சுற்றம் : 2 / பிப்ரவரி 2021 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-





**கானா குயில் இசைவாணி**

# மேடைத்தமிழ் வளர்த்த மேதைகள்

**உழவர் ஒழிப்புச்சட்டங்களின் பின்னணி**




வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly February 2021

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**
அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

வேளாண் மக்கள் போராட்டம் ( தலையங்கம்)........................................ 4

நாடகக் கொட்டாய் முதல் சினிமாக் கொட்டாய் வரை (2).........................5

உருவு கண்டு எள்ளாமை வேண்டும்................................................... 8

அர்னாப் கோஸ்வாமி யார்?................................................................ 9

உங்கள் பாதங்களின் உட்புறம் cocount oil ஐப் பயன்படுத்துங்கள்............................................................................ 11

அன்பார்ந்த பகுஜன் திராவிட சொந்தங்களே...................................... 13

தமிழில் அடிச்சொற்கள்..................................................................... 14

கானா குயில் இசைவாணி..................................................................16

நல்லாசிரியர் அருணாச்சலம்..............................................................17

ஆற்றலாளர் சசிகலா..........................................................................19

தமிழ்மன்னர்கள் கோவில்களைக் கட்டுவதற்கு வழிகாட்டிய அந்தணர்கள் சித்தர்களா? பார்ப்பணர்களா?...................20

மேடைத்தமிழ் வளர்த்த மேதைகள் மா.பொ.சிவஞானம் ........................................................................23

தமிழ்நாட்டில் ஆட்சி செய்த பல்லவர்களின் வரலாறு என்ன? ....................................................................26

சோபியா டால்ஸ்டாய் ......................................................................28

உழவர் ஒழிப்புச் சட்டங்கள் பின்னணியில் நீண்டகால சதி
கி. வெங்கட்ராமன் ..........................................................................30

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# வேளாண் மக்கள் போராட்டம்

வேளாண் மக்களின் கடன்கள் தள்ளுபடி என்ற அறிவிப்பை தமிழக முதல்வர் கொடுத்திருக்கிறார். தமிழ்நாட்டின் வேளாண் மக்கள் மகிழ்கின்றனர் என்றாலும், டெல்லியில் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கிற போராட்டம் இன்னும் முடிவுக்கு வந்த பாடில்லை.

போராடுகிற வேளாண் மக்களில் பலர் இறந்து கொண்டிருக்கிறார்கள், பேச்சு வார்த்தை பேச்சு வார்த்தை என்று போய்க் கொண்டிருக்கிறதே தவிர, நடுவண் அரசு ஒரு முடிவுக்கு வரவில்லை. தாங்கள் போட்ட சட்டம் போட்டதுதான் என்ற அதிகார மமதையோடு நடந்து கொள்வதாகவே தெரிகிறது. மூன்று சட்டங்களையும் ஒத்தி வைக்க முடிவெடுக்கிறவர்கள், அவற்றை நீக்க முடிவெடுக்க மாட்டோம் என்கிறார்கள். ஆயிரக்கணக்கில் வேளாண் பெருங்குடி மக்கள், பல இன்னல்களுக்கும் நடுவே போராடிக் கொண்டிருப்பதை வெளிநாட்டினர் பார்த்து கண்டிக்கத் தொடங்கிவிட்டனர்.

அதை பொறுத்துக் கொள்ள முடியாத சங்கிகள், இறையாண்மைக்குள் தலையிட வேண்டாம் என்று கூவுகின்றன. பல மாநிலங்களைக் கொண்ட இந்தியாவின் சட்டதிட்டங்கள் எப்படி ஒவ்வொரு மாநிலத்தையும் கட்டுப்படுத்துகிறதோ, தாக்கங்களை ஏற்படுத்துகிறதோ அதுபோல, உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டின் நடவடிக்கைகள், பிற நாடுகளின் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்துவது இயல்புதானே. ஒரு சிக்கல் வருகின்றபோது, அதை குறிப்பிட்ட நாட்களில் முடிவுக்கு கொண்டு வந்து, மக்களுக்கு அனுகூலமான நிலையை எடுப்பதுதான் ஒரு சிறந்த அரசுக்கு எடுத்துக்காட்டு. ஆனால், இந்திய ஒன்றியத்தில் எல்லாம் தலைகீழாக நடக்கிறது. லட்சக்கணக்கில் வேளாண் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட தலைமையமைச்சர் வாய் திறக்கிறாரில்லை. இந்த மக்களெல்லாம் நமக்குத் தேவையில்லை, அதானி, அம்பானி, அகர்வால்கள் போதும், அதோடு வாக்கு இயந்திரம் போதும் என்ற நிலையில் ஆளும் அரசு நடந்து கொள்வதாகவே நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

ஒவ்வொரு ஆட்சிக்கும் முடிவு உண்டு. ஆனால், மோசமான, மக்கள் விரோத அரசுகளுக்கு வரும் முடிவு, மிகவும் கொடியதாகத்தான் இருந்திருக்கிறது. இதை நாம் வரலாற்றின் நெடுகிலும் படித்தும் பார்த்தும் அறிகிறோம். ஆகவே, ஆளும் அரசு, தன்னை மக்களுக்கான அரசாக மாற்றிக் கொள்வது நாட்டுக்கும், அரசுக்கும் நல்லது.





# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

## 12



## பட்டுப்புழுவும் - படப்பிடிப்பும்

**பூவை தயா**

கடும் குளிர் நிலவிய அந்தக் காலைப் பொழுதில், விறுவிறுப்பாக படப்பிடிப்புக்கான ஆயத்தப்பணிகள் அமர்க்களமாய்த் தொடங்கியது. படத்தின் பெயர் 'இதயராகம்'. படப்பிடிப்பு நடந்த இடம் பெங்களூருவி லிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு கிராமம். படப்பிடிப்புக்குழுவினர்கள் விரைத்துப்போய் வெட வெடத்து நின்றனர். எந்தப் பொருளையும் கைகளால் தொட முடியாத உறைந்து போன ஒரு நிலை. கிராமம் என்பதால் காலைக்கடன் கழிக்க பெரும் குவளையில் நீர் எடுத்துச் சென்றவர்களிடம் பெரும் பாலானாவர்களின் கையிலிருந்து எப்போதோ அந்தக் குவளை கீழே விழுந்ததைக் கூட உணர முடியாமல் சென்றவர்களில் நானும் ஒருவன். இந்த நிலை காலை எட்டுமணி வரையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டி ருக்கும். கதிரவன் வந்த பின்னே விமோசனம் பிறக்கும். அப்படியொரு பனிப்பொழிவு, குளிர், ஊதக்காற்று. என் வாழ்நாளிலேயே இதையெல்லாம் அந்தக் கிராமத்தில் தான் சந்தித்தேன் அவஸ்தையோடு அனுபவித்தேன்.

அந்தக் கிராமத்தில் விவசாயமும், பட்டுப்புழு வளர்ப்பதும் பெரும் தொழிலாக இருந்தது. கூட்டுறவுப் பண்ணையில் சிறு பட்டுப் புழுக்களை வாங்கி வந்து அதற்கென்ற ஒரு நீளமான அறையில், இலை தழைகள் போட்டு மிகவும் சுத்தபத்தமாக இருந்து அவைகளை வளர்க்க வேண்டுமாம். அக்கிராமத்தில் பட்டுப்புழு வளர்த்து பட்டுப் போனவர்களும் உண்டு. பணம் பார்த்தவர்களும் உண்டாம். பட்டுப்போனவர்களை பல முறை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களிடம் பாதிக்கப்பட்டதின் காரணத்தையும் கேட்டறிந்தேன்.

படப்பிடிப்புத் துவங்கிய நாளில், ஒரு குடும்பத்தார் பள்ளிக்கூடம் போன்ற அறையில் பட்டுப் புழுக்களை வாங்கி வந்து, ஒரு பெரிய வட்ட வடிவ முறம் பலவற்றில் முதலில் இலை தழைகளை நிரவி (பட்டுப்புழுவிற்கான இலை தழைகள் தனியாக விவசாயம் செய்யப்படுகிறது) அதன்மேல் பட்டுப் புழுவை தூவி வைக்கிறார்கள். ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் குளிக்காமல் உள்ளே வரக்கூடாதாம். மாதவிலக்கான பெண்கள் அந்த அறைக்குள் செல்ல மாட்டார்களாம். காரணம், சுத்தமின்றி சென்றால் பட்டுப்புழுவின்மேல் ஒரு கரும் பச்சை படிந்து அழுகிவிடுமாம். அதன் கதையும் முடிந்து விடுமாம்.

தினசரி காலையும் மாலையும் அந்த அறைக்குள் சென்று கற்பூரம் காட்டி வழிபடுவார்கள். இவ்வாறு 23 நாட்கள், 23ஆம் நாள் காலையில் வட்டவடிவ முறத்தில் உள்ள எல்லா பட்டுப் புழுக்களையும் வெளியே கொண்டுவந்து நல்ல வெயில்படும்படி கிடத்துவார்கள். சுள்ளென்ற வெயிலின் வெப்பம் தாங்க முடியாத பட்டுப் புழுக்கள் மெல்லிய நூலிழை போன்று தன்னைச் சுற்றி கூடு கட்டி பாதுகாத்துக் கொள்கிறது. சூரிய அஸ்த்த மனத்திற்குள் பொன்னிற வடிவில் சிறய முட்டை போன்று கட்டி முடித்து விடுகிறது. இயற்கையில் சிருஷ்டியில் பட்டுப் புழுவின் நேர்த்தியான பொன்கூடு பார்ப்பவர்களின் நெஞ்சை மெய் மறக்கச் செய்து விடுகிறது. மேலும் இரண்டு முன்று தினங்களுக்குள் அந்தப் பொன் கூட்டை சுடு தண்ணீரில் போட்டு எடுத்துவிட வேண்டுமாம். இல்லையென்றால் கூட்டிற் குள் ருக்கும் புழுவிற்கு இறக்கை முறைத்து கூட்டை பொத்துக் கொண்டு பறந்து விடுமாம். கூடு ஓட்டையா னால் அதிலிருந்து பட்டுநூல் எடுக்க முடியாதாம். இதுவே பட்டுப்புழுவின் வரலாறு.

இந்தப் பட்டுப்புழு வளர்ந்த இடத்தின் வெளிப் புறத்தில் ஒரு மிகப்பெரிய திண்ணை உண்டு. அந்தத் திண்ணையில்தான் நானும் மற்ற சககலைஞர்கள் பத்துப்



கொண்டு அடுப்பு மூட்டி குளிப்பதற்கு சுடு தண்ணீர் வைத்துத் தருவார்கள்.


இப்படத்திற்கு உதவி வசனம் எழுத வந்த நான், இணை இயக்குநராகவும் பணிபுரிந்தேன். மேலும் சென்னையிலிருந்து வந்த அன்றே பெங்களூருவில் எனக்கும் அப்பாவிற்கு இயக்குனருக்கும் 'ரூம்' போட்டிருந்தார்கள். ஐந்து நாளில் படப்பிடிப்பு ஆரம்பம். நீங்கள் ஒரு முப்பது நாற்பது காட்சிகளை உடனடியாக எழுதித் தரும்படி இயக்குனரும் தயாரிப்பாளரும் கேட்டுக் கொண்டார்கள். ஏற்கனவே இயக்குனர் 'ஸ்கிரீன்பிளே' தயாரித்து வைத்திருந்ததால் நானும் அப்பாவும் இரவு பகலென்று பாராது நாற்பது சீனுக்கு வசனம் எழுதி முடித்து விட்டோம். இயக்குனர் நான் எழுதிய சீனை வாங்கிப் பார்த்து அப்பாவிடம் "சார்! உங்க 'சன்' உங்களைப் போலவே எளிமையாகவும் இனிமையாகவும் மக்கள் ஏத்துக்குற கருத்தாகவும் எழுதிருக்கிறார். நீங்கள் இருவரும் நாற்பது காட்சிகளை ஆளுக்கு இருபது காட்சி என்று எடுத்துக் கொண்டபோது நான் கொஞ்சம் யோசித்தேன். இது சரியா வருமா என்று, அனால் எல்லாக் காட்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் அமைந்திருக்கிறது. மிக அருமை சார்" என்றார்.

பேரும் குளிரையும் பொருட்படுத்தாமல் உறங்குவோம். அப்பா, இயக்குனர், கேமராமேன் போன்றோருக்கு அந்தக் கிராமத்திலேயே ஒருவர் வீட்டில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்திருந்தனர். அதே போன்று கதாநாயகி, துணை கதாநாயகி, அம்மா, அக்கா வேடத்தில் நடிப்பவர்கள் இன்னொரு வீட்டில் பேசி தங்க வைக்கப்பட்டார்கள். அங்கேயே படப்பிடிப்புக் குழுவினர் யாவருக்கும் மூன்று வேளை உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். மொத்தத்தில் எக்கணமும் சிக்கனம் கடைபிடிக்கப்பட்டது.

இந்த 'இதயதாகம்' படத்திற்கு அப்பாவின் நண்பர் மூலம் வசனம், பாடல் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தப்படத்தின் மூலக்கதையும் தயாரிப்பாளரும் ஒருவரே. அவர் பெயர் அசோக். பெங்களூரு போன சில திங்களிலே எனக்கு அவர் நல்ல நண்பர் ஆனார். முழுக்க முழுக்க கன்னடத்துப் புதுமுகங்களை வைத்து ஒரு தமிழ்ப்படம் எடுக்க வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் ஆசையாம்... படம் முழுவதையும் பெங்களூரு சுற்று வட்டாரங்களிலே முடித்துவிட்டால், கர்நாடக அரசின் மானியம் கிடைக்கும் என்பது அவரின் எண்ணம். படத்தின் இயக்குநர் இராமன் ஆவார்கள். அவர் பெங்களூருவாசியான தமிழர்.

இந்தப்படத்தின் கேமராமேன்... அமிதாப், தர்மேந்திரா நடித்த 'ஷோலே' படத்தின் உதவி கேமராமேனாக பணியாற்றியவர். கதாநாயகன், கதாநாயகிகள் அனைவரும் புதுமுகம் என்று முன்னே குறிப்பிட்டிருந்தேன். இதில் கதாநாயகி வாக்குதேவி என்பவரும் துணை கதாநாயகி இராணி என்பவரும் அருமையாக தமிழ் பேசக்கூடியவர்கள். அதுமட்டுமல்லாது எல்லோரிடமும் அன்போடும் பண்போடும் பழகக்கூடியவர்கள். இதில் துணை கதாநாயகியான ராணியும் அம்மா என்மீதும் அப்பா மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவர்கள். அதனால்தான் எங்கள் இருவருக்கும் தினமும் ஒரு மரத்தடியில் கல்லைக்

நான் அவரிடம் கேட்டேன் "எல்லாம் சரிதான் சார், ஆனா இந்தக் கதை இருபத்தஞ்சு வருசத்துக்கு முன்னால வரவேண்டிய கதை, இதை ஏன் நீங்க அவருக்கு எடுத்துச் சொல்லலே சார்?" என்றேன். "நீங்க சொன்னதையே நானும் பலமுறை சொன்னேன் அவரு ஏத்துக்கலே" என்றார் இயக்குனர். அந்நேரம் அங்கு வந்த தயாரிப்பாளர் அசோக், என்னை அழைத்தார். "தயா,



நாளைக்கு காலையிலே சூட்டிங். ஆர்ட்டிஸ்ட்டுகளுக்கு டிரஸ் ரெடி பண்ணலே, நாம ரெண்டு பேரும் போவோம் 'ரெடிமேட்' ல என்னென்ன கிடைக்குதோ வாங்கிடுவோம். லேடீஸ்பத்தி பிரச்சனை இல்லை. அவுங்க 'வோன்' காஸ்ட்யூம்ஸ் நிறைய வச்சிருக்காங்க" என்றவர் என்னை கையோடு பெரிய ரெடிமேட் கடைக்கு அழைத்துச் சென்றார். கதையின் கதாபாத்தி ரங்கள் என்னென்ன என்பது தெரிந்த காரணத்தினால் ஓரளவிற்கு அவர்களுக்கு தோதாக உடைகளை தேர்ந்தெடுத்தேன். ஆனால் அளவு மாறுபடுமே என்று கூறினேன். "அதை அந்த கிராமத்தில உள்ள டெய்லர் கிட்டே கொடுத்து சரி பண்ணிடலாம்" என்ற தயாரிப் பாளர் இன்னொன்றையும் சொன்னார். "தயா, டைட்டில் கார்டுல... உதவி வசனம், இணை இயக்கம்னு உன்னோட கார்டு தனி கார்டா போடுறேன்" என்றார். "அப்படியா! சார்! தனி கார்டா போடும்போது என்னோடு விலாசத்தையும் சேர்த்து போடுங்க சார்" என்றேன். அவர் என்னை தட்டிக் கொடுத்து சிரித்தார்!

பெரிய அளவிற்கு 'ஷாட் பியூட்டி' யெல்லாம் பார்க்காமல் பத்து நாள் சூட்டிங் முடிந்திருந்த நிலையில், நான் மட்டும் கொஞ்சம் சோர்ந்து போனேன். காரணம், 'கிளாப்' அடிப்பதும், வசனம் சொல்லிக் கொடுப்பதும், கன்டினியூட்டி பார்த்த எழுதுவதுமாய் இருந்ததால். என் நிலையைத் தொடர்ந்து கவனித்தவந்த என் அப்பா இயக்குனரிடம் "படம் பண்றதுன்னா சாதாரண விசயமில்லே எல்லாத்துலயும் கவனம் செலுத்தணும். ஒரு படம்னா டைரக்டருக்கு நாலஞ்சு பேர் உதவி இயக்குனரா இருப்பாங்க. இங்கே உங்களுக்கு தயா மட்டும்தான் இருக்கான். இது சரியா வராது. நாளைக்கு படத்திலே கன்டினியூட்டி மிஸ் ஆச்சு, அது மிஸ் ஆச்சு இது மிஸ் ஆச்சுன்னு தயாவை குறை சொல்லாதீங்க. இதுலயெல்லாம் சிக்கனம் பார்தோம்னா, படத்தை நிறைவா பாக்க முடியாது" என்று சற்று கோபத்துடனே கூறினார்கள். இந்தச் செய்தி தயாரிப்பாளர் காதுக்குப் போனது. மறுநாள் எந்த அனுபவமுமே இல்லாத ஒரு நல்ல மனிதர் வந்தார். அவருக்கு எதுவுமே புரிவில்லையென்றாலும் என் முதுகுக்குப் பினனால் துணையாக நின்றார். அவர் எனக்குச் செய்த ஒரு நல்ல காரியம் என்ன என்றால் முழுக்கை ஸ்வெட்டர் கொடுத்ததுதான். இதன் பின்னர் அப்பாவிற்கு வேறு ஒரு படத்தில் பாடல் எழுத அழைப்பு வந்ததும், என்னிடம் கவனமாகப் பார்த்துச் செய், மீதமுள்ள காட்சிகளுக்கும் நேரம் கிடைக்கும்போது வசனத்தை எழுதி முடித்துவிடு என்று சொல்லி சென்னைக்குப் பயணமானார்கள்.

மறுநாள் படப்பிடிப்பு ஆரம்பமானது. கதாநாயகன் பொது மக்களிடம் உரையாடிக் கொண்டிருக்கிற காட்சி. வெகுதூரத்தில் அம்பாசிடர் காரில் தயாரிப்பாளர் வந்திறங்கி என்னை கையால் அழைத்தார். நானும் போனேன். அவர் என்னிடம் "தயா காருக்குள்ள ஒருத்தன் இருக்கான் அவன் எப்படி இருக்கான்னு சொல்லு" என்றார். நான் பார்த்து அவரிடம் சொன்னேன். ரொம்ப நல்லாவே இருக்காருன்னு, "அப்படியா... அப்படி இனிமே இவன்தான் கதாநாயகன். அவனுக்கு வேற வேசம் குடுக்கலாம்" என்றார். நான் திகைத்து நின்றேன்.

**பயணம் தொடரும்..**



## மூல நோய்

துத்தி இலைகளை ஒரு கைப்பிடி எடுத்து, சுத்தமான தண்ணிரில் நன்றாக கழுவிவிட்டு, அதனுடன் நான்கு சின்ன வெங்காயம் எடுத்து அத்துடன் சேர்த்து மைய அரைத்துவிட்டு, அதை மோரில் கலந்து காலையிலும் மத்தியானமும் ஒரு குவளை என்ற விகிதத்தில் நான்கு நாள்களுக்கு குடித்து வந்தால் எந்தவிதமான மூலநோயும் குணமாகிவிடும்.

துத்தி இலையை கழுவிவிட்டு வாயில் போட்டு மென்றும் உண்ணலாம். துத்தி இலையை விளக்கெண்ணெய்யில் போட்டு வதக்கி, ஆறவைத்து, அதை ஆசனவாயில் வைத்துக் கட்டினால், உடல் வெப்பம் குறையும். மூலம் தொடர்பான எல்லா துன்பங்களும் நீங்கும்.

மற்றொரு இயற்கை மருத்துவம் யாதெனில், பெரிய வெங்காயம் ஒன்றை எடுத்துக் கொண்டு, மேற்தோலை நீக்கி விட்டு, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, மிக்சியில் போட்டு, ஒரு குவளை தண்ணீர் விட்டு, நன்றாக அரைத்து எடுத்துக் கொண்டு, அதை குவளையில் வடிகட்டிவிட வேண்டும். வடிகட்டி எடுத்த வெங்காயம் கலந்த நீரை, நாலு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒரு குவளை குடிக்க வேண்டும். தொடர்ந்து நான்கு நாட்களுக்குக் குடித்து வந்தால் எல்லா மூலமும் காணாது போகும். நார்ச்சத்து மிக்க வெங்காய ஜூஸ் மூலத்துக்கு மிகவும் நல்லது.

# உருவு கண்டு எள்ளாமை வேண்டும்!

எப்பொழுதும் ஒருவரை அவரின் உயரத்தைப் பார்த்து எடை போடக் கூடாதென்று சொல்லுவார்கள். திறமையை மட்டும் பார்க்கும்போது அவர்களின் உண்மையான உயரம் தெரியும். அந்த வகையில் தன் திறமையால் சாதித்த, ராஜஸ்தான் மாநில ஐ.ஏ.எஸ் அதிகாரி, ஆர்த்தி டோக்ராவின் உயரம் மூன்று அடி ஆறு அங்குலம் மட்டுமே.

உத்தரகாண்ட் மாநிலம் டோராடூனில், 1979ஆம் ஆண்டு பிறந்தார் ஆர்த்தி. இவரது தந்தை இராணுவ அதிகாரி கர்னல் ராஜேந்திர டோக்ரா. தாயார் கும்கும் டோக்ரா. ஆர்த்தி பிறந்ததும், இந்தக் குழந்தை உடல் வளர்ச்சியடையாது என்று மருத்துவர்கள் கூறினார்கள். அன்றிலிருந்து அவரது பெற்றோர், ஆர்த்தி மட்டும் தான் உலகம் என்று, அவருக்காகவே வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். ஆர்த்தியின் குறைபாட்டினால், மற்றவர்கள் அவரது பெற்றோரிடம் இரண்டாவது குழந்தை பெற்றுக் கொள்ளக் கூறினார்கள். ஆனால் ஆர்த்தியின் பெற்றோருக்கு முழு நோக்கமும், ஆர்த்தியாக மட்டுமே இருந்தது.

இதையடுத்து, டேராடூனில் உள்ள பிரசித்தி பெற்ற பள்ளியில் படித்தார் ஆர்த்தி. படிப்பில் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். பொருளாதாரப் பட்டப்படிப்பை டெல்லிக்குச் சென்று படித்தார். முதுகலைப் படிப்பை மீண்டு டேராடூனில் படித்தார். ஆர்த்தியின் படிப்பிற்கு முழு உறுதுணையே அவரது பெற்றோர்தான்.

தன்னுடைய வாழ்க்கை எதை நோக்கிச் செல்கிறது, என்று நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில் ஆர்த்தியின் வாழ்வில் திடீரென ஒரு மாற்றம். முதுகலைப் படிப்பு படிக்கும்போது, ஐ.ஏ.எஸ். அதிகாரி மணிசாவை நேரில் சந்தித்தார் ஆர்த்தி. அங்கிருந்துதான் ஆர்த்தியின் வெற்றிப்பயணம் தொடங்க ஆரம்பித்தது. ஐ.ஏ.எஸ் படிக்க முடிவு செய்தார். அதற்காக இரவும், பகலுமாகப் படித்து வந்தார் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் முயற்சியிலேயே ஆர்த்தி ஐ.ஏ,எஸ். தேர்வில் வெற்றி பெற்றார். அதுவும், சாதாரண வெற்றி அல்ல, இந்திய அளவில் ஐம்பத்தாறாவது இடத்தைப் பிடித்து தேர்ச்சி பெற்றார். 2006ஆம் ஆண்டே ராஜஸ்தானில் ஐ.ஏ.எஸ். பணியைத் தொடங்கினார். ஆர்த்தியின் கனவு நிறைவடைந்தது. பட்ட துன்பத்திற்கு எல்லாம் பலன் கிடைத்தது. அவரது பெற்றோருக்கும் பேரின்பம். அன்று முதல் இன்று வரை மக்களுக்குச் சேவை செய்து வருகிறார் ஆர்த்தி.

அதிகாரியாக ஆர்த்தி சென்ற இடமெல்லாம் மாற்றம்தான். பிகேனரில் தூய்மைப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். இதனால், அங்கு 195 கிராம பஞ்சாயத்துகளில் மக்களே கழிப்பறைகளைக் கட்டிக் கொண்டனர். இதனைக் கண்டு மற்ற மாவட்டங்களும் கழிப்பறைகளைக் கட்டி வந்தனர். அப்பகுதியில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்காக மருத்துவர்களிடம் உதவி கேட்டார். இதையடுத்து நாற்பது மருத்துவர்கள், சிறுமிகளை தத்தெடுத்து கல்வி, உணவு, உறைவிடம் என்று அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தனர். இந்த மாற்றம் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதே போல, ஜோத்பூஷர் டிஸ்காமில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான எல்.இ.டி. விளக்குகளை விநியோகித்து, குறைந்த விலையில் மின்சார வசதிகளைச் செய்து கொடுத்தார்.

கடந்த 2018ஆம் ஆண்டில் அஜ்மீர் மாவட்ட தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றிய போது, மாற்றுத்திறனாளிகளுக்கு வாகன உதவிகளைச் செய்து கொடுத்தார். அஜ்மீர் தேர்தலில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக, கடந்த 2019ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்திடம், 'தேசிய விருதை'ப் பெற்றார்.

தற்போது ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்த்தியால் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. திறமை இருந்தால் மட்டும் போதும். எங்கு சென்றாலும், எப்படி இருந்தாலும் சாதிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ஆர்த்தி டோக்ரா.



# அர்னாப் கோஸ்வாமி யார்?

லூசிபர் திரைபடத்தில் மோகன்லால் ஒரு கருத்தை சொல்வார்.. இந்த தேசத்தை உயிரோட கடித்து குதறி, ரத்தத்தை உறிஞ்சி குடிக்கும் செந்நாய்களில் ஒன்று தான் இந்த மீடியா என்பார். அந்த செந்நாயில் மிகப் பெரிய வேட்டை நாய் தான் இந்த அர்னாப் கோஸ்வாமி.

என்.டி.டிவி', 'டெலிகிராப்', 'டைம்ஸ் நவ்' போன்ற செய்தி சேனல்களில் சாதாராண நெறியாளராக பணியாற்றிய இவன், மூன்றே மாதத்தில் ரிப்பப்ளிக் டிவி எனும் செய்தி சேனலை .. மற்ற செய்தி சேனல்களை விட பிரம்மண்டமாய் துவங்கிய போதே சர்ச்சைகள் எழுந்தது.

மோடி என்கிற பிம்பத்தை 2010 இன் துவக்கத்தி லிருந்தே " பிரதமர் வேட்பாளராக " முன்னிறுத்தி .. ஊதிப் பெரியதாக்கியதில் இவனுக்கு பங்களிப்பு இருந்தது. அன்னா ஹசாரே எனும் கிழ முண்டத்தின் காமெடி சாகசங்களை டைம்ஸ் நவ் / என்.டி.டிவி கொண்டாடி தீர்த்ததிலும் இவனும், இவனது நியூஸ் ஏஜென்சிகளுக்கும் ரோல் உண்டு.

மோடி பிரதமரான பிறகு, தனக்கு நம்பிக்கையான, அதிகமான ஜால்ரா சத்தத்துடன் குரைக்க ஒரு வேட்டை நாய் தேவை என்கிற தேர்வில் தான் அர்னாப் டிக் செய்யப்பட்டான். குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய முதலீடு, செய்திச் சேனல் அனுமதி,





நியூஸ் ஏஜென்சிகளை வளைத்து போட்டது என அத்தனையும் திட்டமிடப்பட்டது.

குறைந்தபட்ச ஊடக தர்மம் கூட இல்லாமல், அதாவது, ஒரு பார்மாலிட்டியை கூட கடைபிடிக்காமல், வெளிப்படையாகவே வலதுசாரி சிந்தனையை தூக்கிப் பிடித்தான்..

விவாதங்களில் உரக்க குரைப்பது, பிறரின் கருத்துகளை நசுக்குவது,

எதிர்கட்சிகளை கீழ்த்தரமாக பேசுவது, மத்திய அரசே தனது பாக்கெட்டில் இருப்பது போன்ற திமிர்த்தனம் அதிகமாகவே இருந்தது.. சங்கிகளுக்கு இவன் ஒரு தேவலோக இந்திரனாக தெரிந்தான்.

ஆனால்.. எவ்வளவு தான் இவனை ஒரு ஊடக திறமைசாலியாக, தேசபக்தனாக பிம்பத்தியிருந்தாலும், இவனது தகுதி, இவனது ஒரிஜினல் புத்தி, இவனது ஈனப் புத்தி இவன் யார் என்பதை, இவனது உண்மை முகத்தை, இவனது செயல்பாடுகளிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது.

முதலாவதாக, தனது சேனலை டி.ஆர்.பி ரேட்டிங்கில் முதலிடத்தில் கொண்டு வர, தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் இயங்கிவரும் பிகிஸிசி (Broadcast Audience Research Council) நிறுவனத்தின் முன்னாள் சி.இ.ஒவான பார்த்தோ தாஸ் குப்தாவிடம் பேரம் பேசியதை சிவசேனா கட்சி அம்பலப்படுத்தியது. ஜெயிலிலும் அடைக்கப்பட்டான்.

ஒரு காலத்தில் சிவசேனா, பாஜக, அர்னாப் என ஒரே நேர்கோட்டில் பயணித்ததால் .. தற்போது, சிவசேனா பாஜகவின் எதிர் முகாமில் இருந் தாலும், அர்னாப்பின் பிராடுத்தனங்களை வெளிக்கொணர் வதில் சிவசேனாவிற்கு கடினம் இல்லை. இவனை பிதுக்க வேண்டும் என்பதில் சிவசேனா உறுதியாக இருக்கிறது..

தற்போது, புல் வாமா தாக்குதல் விவ காரத்திலும் சிக்கி யிருக்கிறான். அர்னாப் கோஸ்வாமிக்கும், பார்த்தோ தாஸ்குப் தாவுக்கும் இடையில் கசிந்த வாட்ஸ்அப் உரையாடலில், அர்னாப், "ஒரு பெரிய வேலை செய்யப்படும்" என்று கூறுகிறான், இது "சாதாரண தாக்குதலை விட பெரியது" என்கிறான். இந்த உரையாடல் பிப்ரவரி 23, 2019 நடந்துள்ளது. பாகிஸ்தானின் பாலக்கோட்டில் நடந்த ஐ.ஏ.எஃப் தலைமையிலான வான்வழித் தாக்குதல் களுக்கு சுமார் மூன்று நாட்களுக்கு முன்பு இந்த உரையாடல் நடைபெற்றுள்ளது.

இந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம், ராணுவ நடவடிக்கைகள், ரகசியங்கள் அர்னாப் போன்ற ஊடக பொறுக்கிகளின் பாக்கெட்டில் இருப்பது தான் உச்ச கட்ட வேதனை. இந்த லட்சணத்தில் இந்த முட்டாள் கூட்டம் தேச பக்தி குறித்து நமக்கு பாடம் எடுக் கிறார்கள்.

அப்படியானால் இந்த அரசாங்கம் தனது தேர்தல் வெற்றிக்கும், தனது வெத்து விளம்பரத்திற்கும் இந்த தேசத்தையே ஒரு ஊடக பொறுக்கியிடம் ஒப்படைத்திருக்கிறது என்றால் எவ்வளவு பெரிய வேதனை. இன்னும் வெளிவராத விசயங்கள் எவ்வளவு இருக்கக் கூடும்.. இது குறித்து பெரிய அளவில் எதிர் வினையாற்றாது காங். பொலிட்பிரோ டெல்லி குளிரில் நன்றாக மூடிக் கொண்டு தூங்குகிறது .

அர்னாப் தனது விவாதங்களில் அடிக்கடி சொல்லும் வார்த்தை .. The Nation wants to know'- . இப்போது, இந்திய பிரதமரிடமும், பாதுகாப்பு அமைச்சகத்திடமும் இந்த தேசமே கேட்க வேண்டிய கேள்வி : என்ன நடந்தது என The Nation wants to know'-

நன்றி: மருதம் முகநூல் பதிவு
WA : Abdul Hameed, Pathibanoor

# உங்கள் பாதங்களின் உட்புறம் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துங்கள்!

1. என் தாத்தா தனது 87 வயதில் இறந்துவிட்டார், முதுகுவலி இல்லை, மூட்டு வலி இல்லை, தலைவலி இல்லை, பல் இழப்பு இல்லை என்று ஒரு பெண் எழுதினார். ஒருமுறை அவர் பெங்களூரில் வசித்தபோது ஒரு வயதானவரை அறிந்திருப்பதாகக் கூறினார். நான் தூங்கும்போது என் கால்களில் எண்ணெயை இடுகிறேன் என்று அறிவுறுத்தியிருந்தேன். இது சிகிச்சை மற்றும் உடற்தகுதிக்கான எனது ஒரே ஆதாரமாகும்.

2. மணிப்பாலைச் சேர்ந்த ஒரு மாணவர், என் பாதங்களில் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்த என் அம்மா வற்புறுத்தியதாகக் கூறினார். ஒரு குழந்தையாக இருந்தபோது, அவரது பார்வை பலவீனமடைந்தது என்று அவர் கூறினார். அவள் இந்த செயல்முறையைத் தொடர்ந்தபோது, என் கண் ஒளி படிப்படியாக முழுமையாகவும் ஆரோக்கியமாகவும் ஆனது.

3. ஒரு தொழிலதிபரான உடுப்பியைச் சேர்ந்த திரு காமத் என்ற ஒரு மனிதர் நான் விடுமுறைக்காக கேரளா சென்றேன் என்று எழுதினார். நான் அங்குள்ள ஒரு ஹோட்டலில் தூங்கினேன். என்னால் தூங்க முடியவில்லை. நான் வெளியே நடக்க ஆரம்பித்தேன். இரவில் வெளியே உட்கார்ந்திருந்த பழைய காவலாளி என்னிடம், "என்ன விஷயம்?" நான் தூங்க முடியவில்லை என்று சொன்னேன்! அவர் சிரித்துக்கொண்டே, "உங்களிடம் தேங்காய் எண்ணெய் ஏதேனும் இருக்கிறதா?" நான் இல்லை என்று சொன்னேன், அவர் சென்று தேங்காய் எண்ணெயைக் கொண்டு வந்து, "உங்கள் கால்களின் பாதங்களை சில நிமிடங்கள் மசாஜ் செய்யுங்கள்" என்றார். பின்னர் குறட்டை போட ஆரம்பித்தேன். இப்போது நான் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளேன்.

4. இரவில் தூங்குவதற்கு முன் என் கால்களில் தேங்காய் எண்ணெய் மசாஜ் செய்ய முயற்சித்தேன். இது எனக்கு நன்றாக தூங்கவும் சோர்வு நீக்கவும் செய்கிறது.



5. எனக்கு வயிற்று பிரச்சினை இருந்தது. என் கால்களில் தேங்காய் எண்ணெயுடன் மசாஜ் செய்த பிறகு, எனது வயிற்று பிரச்சினை 2 நாட்களில் குணமாகியது.

6. உண்மையில்! இந்த செயல்முறை ஒரு மந்திர விளைவைக் கொண்டுள்ளது. இரவில் தூங்குவதற்கு முன் தேங்காய் எண்ணெயால் என் கால்களின் பாதங்களை மசாஜ் செய்தேன். இந்த செயல்முறை எனக்கு மிகவும் நிம்மதியான தூக்கத்தை அளித்தது.

7. நான் கடந்த 15 ஆண்டுகளாக இந்த தந்திரத்தை செய்து வருகிறேன். இது எனக்கு மிகவும் தூக்கத்தை ஏற்படுத்துகிறது. என் இளம் குழந்தைகளின் கால்களை தேங்காய் எண்ணெயால் மசாஜ் செய்கிறேன், இது அவர்களை மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமா கவும் வைத்திருக்கிறது.

8. என் கால்கள் வலிக்கிறது. இரவில் தூங்குவதற்கு முன் தினமும் 2 நிமிடங்கள் தேங்காய் எண்ணெயுடன் என் கால்களின் பாதங்களை மசாஜ் செய்ய ஆரம்பித்தேன். இந்த செயல்முறை என் கால்களில் ஏற்பட்ட வலியிலிருந்து நிவாரணம் அளித்தது.

9. என் கால்கள் எப்போதும் வீங்கியிருந்தன, நான் நடக்கும்போது சோர்வாக இருந்தேன். தேங்காய் எண்ணெய் மசாஜ் செய்யும் இந்த செயல்முறையை நான் இரவில் தூங்குவதற்கு முன் என் கால்களில் தொடங்கினேன். வெறும் 2 நாட்களில், என் கால்களின் வீக்கம் மறைந்தது.

10. இரவில், படுக்கைக்குச் செல்வதற்கு முன், தேங்காய் எண்ணெய் மசாஜ் ஒரு முனறயை என் கால்களில் பயன்படுத்தினேன். இது என்னை மிகவும் நிம்மதியாக தூங்கச் செய்தது.

11. இது ஒரு அற்புதமான விஷயம். நிதானமான தூக்கத்திற்கான தூக்க மாத்திரைகளை விட இந்த முனற சிறந்தது. இப்போது நான் ஒவ்வொரு இரவும் என் கால்களில் தேங்காய் எண்ணெயுடன் தூங்குகிறேன்.

12. என் தாத்தாவின் காலில் எரியும் உணர்வும் தலைவலியும் இருந்தது. அவர் தனது கால்களில் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தத் தொடங்கினார், வலி நீங்கியது.

13. எனக்கு தைராய்டு நோய் இருந்தது. என் கால் எல்லா நேரத்திலும் வலித்தது. கடந்த ஆண்டு யாரோ ஒருவர் இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன் காலில் தேங்காய் எண்ணெயை மசாஜ் செய்ய பரிந்துரைத்தார். நான் அதை நிரந்தரமாக செய்கிறேன். இப்போது தான் அமைதியாக இருக்கிறேன்.

14. என் கால்களில் கொப்புளங்கள் இருந்தன. இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன் நான்கு நாட்கள் தேங்காய் எண்ணெயுடன் என் பாதங்களை மசாஜ் செய்கிறேன். ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது.

15. எனக்கு பன்னிரண்டு அல்லது பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மூல நோய் இருந்தது. என் நண்பர் என்னை 90 வயதான ஒரு முனிவரிடம் அழைத்துச் சென்றார். தேங்காய் எண்ணெயை கைகளின் உள்ளங்கைகளிலும், விரல்களுக்கிடையில், விரல் நகங்களுக்கு இடையிலும், நகங்களிலும் தேய்க்க அவர் பரிந்துரைத்தார்: நான்கு முதல் ஐந்து சொட்டு தேங்காய் எண்ணெயை தொப்புளில் சேர்த்து தூங்கச் செல்லுங்கள். நான் ஆலோசனையைப் பின்பற்றத் தொடங்கினேன். நான் மிகவும் நிம்மதியடைந்தேன். இந்த உதவிக்குறிப்பு எனது மலச்சிக்கல் பிரச்சினையையும் தீர்த்தது. என் உடல் சோர்வு நீங்கி, நான் நிம்மதியாக உணர்கிறேன். குறட்டையை தடுக்கிறது.

16. என் கால்களிலும் முழங்கால்களிலும் வலி ஏற்பட்டது. என் கால்களில் தேங்காய் எண்ணெய் மசாஜின் முறையை படித்ததிலிருந்து, இப்போது நான் தினமும் செய்கிறேன், அது எனக்கு தூக்கத்தைத் தருகிறது.

17. இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு என் கால்களில் தேங்காய் எண்ணெய் மசாஜின் இந்த மருந்தைப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து, என் முதுகுவலி குறைந்துவிட்டது, நான் நன்றாக தூங்கினேன். எல்லா இடங்களிலும் அனைவருக்கும் மிகவும் எளிதானது.

"நீங்கள் கோகோனட் ஆயிலை மட்டும் பயன்படுத்த வேண்டியதில்லை, ஆனால் எந்தவொரு எண்ணெய், கடுகு, ஆலிவ் போன்றவற்றை கால்களிலும் முழு பாதங்களில் தடவலாம், குறிப்பாக மூன்று நிமிடங்கள் இடது கால், மூன்று நிமிடங்கள் வலது காலின் பாதங்களிலும் மசாஜ் செய்யவும். அதே வழியில் குழந்தைகளுக்கு மசாஜ் செய்யுங்கள்.

உங்கள் வாழ்நாள் முழுவதும் இதை ஒரு வழக்கமாக ஆக்குங்கள். பின்னர் இயற்கையின் அற்புதத்தை பாருங்கள், உங்கள் கால்களின் பாதங்களில். பண்டைய சீன மருத்துவத்தின் படி, கால்களுக்கு அடியில் சுமார் 100 அக்குபிரஷர் புள்ளிகள் உள்ளன. மனித உறுப்புகளை அழுத்தி மசாஜ் செய்வதன் மூலம் குணமாகும். கால் ரிஃப்ளெக்சாலஜி என்று இது கூறப்படுகிறது. கால் மசாஜ் சிகிச்சை உலகளவில் பயன்படுத்தப்படுகிறது.

●

# அன்பார்ந்த பகுஜன் திராவிட சொந்தங்களே......

ஆர்.எஸ்.எஸ்சின் கிளை அமைப்புகளான காங்கிரஸ் ஆளும் போதும் சரி, பாஜக ஆளும் போதும் சரி.. ஏன் இந்தியாவின் பொருளாதாரத்தை அழிக்கத் துடித்தன ஆர்.எஸ்.எஸின் நிறுவனரான கோல்வால்கரின் புத்தகத்தை நீங்கள் படித்தால் உங்களுக்கு புரியவரும்?. முதலில் இந்தியாவின் பொருளாதாரத்தின் பின்புலத்தை உடைப்பதே ஆர்.எஸ்.எஸ்ஸின் முக்கிய குறிக்கோள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். ஆதலால் தான் காங்கிரஸ் ஆளும் போதும் சரி பாஜக ஆளும் போதும் சரி அதை சரியாக செய்து கொண்டு இருந்தார்கள், தற்போதும் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

காங்கிரஸ் மற்றும் பிஜேபி யில் உள்ள பிராம ணர்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்றால், நாட்டில் உள்ள 95% மக்களின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டியது அவசியம் என்று கோல்வால்கர் எழுதியுள்ளார். கோல்வால்கரின் கருத்தின் படி, 95% நாட்டு மக்கள் ஏழைகளாகவும், ஒரு சில பார்ப்பனிய அடிமை சாதிகள் மட்டுமே அனைத்து வசதிகளையும் பெற்றவர்களாக இருக்க வேண்டும், அவ்வாறு செய்வதன் மூலம், அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியும் என சொல்கின்றார்.

இதை கருத்தில் கொண்டு தான் காங்கிரஸ் ஆளும் போதும் சரி பாஜக ஆளும் போதும் சரி மக்கள் விரோத திட்டங்களை வகுத்தனர். அதன் அடிப்படையில் தான், ஜிஎஸ்டி, வங்கிகளை முடக்குதல், அரசாங்க நிறுவனங் களை விற்பனை செய்தல், வேலைவாய்ப்புகளை அறவே குறைத்தல், ஆங்காங்கே கலகங்களை ஏற்படுத்துதல், அரசின் முழு சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தல், அரசியலமைப்பை பலவீனப்படுத்துதல், நாட்டிலிருந்து சிறு வணிகத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், கோடி லாபங்களை கொட்டும் பொதுத்துறை நிறுவனங்களை கட்டாயப்படுத்தி மூட வைப்பது, இப்படியான ஒரு சதித்திட்டத்தின் கீழ் ஆண்ட காங்கிரஸும், பிஜேபி யும் களத்தில் இறங்கி வேலை செய்து கொண்டு இருக் கின்றது.

2016 முதல் 2018 வரை... ஐ.நா. அறிக்கையின்படி, 1095 கொழுத்த ஆர்எஸ்எஸ் பின்புலத்தை கொண்ட பணக்கார இந்தியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் குடியேறி உள்ளனர், இதன் காரணமாக பல லட்ச கோடி ரூபாய் வெளிநாடுகளுக்கு சென்றுள் ளது. தற்போது அரசாங்கத்தின் கொள்கைகள் காரண மாக பல உள்ளூரில் வளர்ந்து வரும் பகுஜன் திராவிட தொழிலதிபர்கள், தங்களுடைய தொழிலில் இருந்து அந்நியப்பட்டு கடனாளிகளாக மாறி நிற்கின்றனர். அதே நேரத்தில் மார்வாடி, பனியா அகர்வால் போன்ற தொழி லதிபர்களின் செல்வம் நாளுக்கு நாள் அதிகரித்தது வருகின்றது. இந்த தொழிலதிபர்கள் காங்கிரஸ் வந்தா லும் சரி, பாஜக வந்தாலும் சரி இவர்களின் ஆளுமை தான் ஓங்கி நிற்கும்.

நாட்டின் பொருளாதாரம் மிகக்கடுமையாக மூழ்கிக் கொண்டிருப்பதைக் பார்க்கும் போது நம்முடைய முகம் சுருங்குகிறது. ஆனால், ஆளும் ஆட்சியாளர்களின் முகத்தில் எந்த சுருக்கங்களையும் பார்க்க முடியாததற்கு காரணம், இவர்கள் கோல்வால்கரின் கோட்பாடை பின் பற்றுகின்றவர்கள் என புரியவரும். கோல்வல்கர் எழுதிய புத்தகத்தில் அவர் குறிப்பிடும் போது ஒரு நல்ல நிர்வாகம் அதன் மாநிலத்தில் உள்ள மக்களின் வரு மானம் மிக மிக குறைவாக மட்டுமே வைக்கப்படு வதை உறுதி செய்ய வேண்டும் என்கிறார்.

மக்கள் செல்வத்தோடு இருந்தால் அவர்களை கட்டுப்படுத்துவது என்பது கடினம், எனவே நிர்வாகிக்கு விசுவாசமாக இருக்கும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கைகளில் செல்வம் குவிந்திருந்தால் தான் வெகுமக்களை தொடர்ந்து ஆள முடியும் என்கிறார். ஆதலால், கோல்வால்கரின் கோட்பாட்டின் படி நாட்டை பலவீனப்படுத்தி அழிக்க வேண்டும் அப்போது தான் பார்ப்பனியமும், பார்ப்பானும் தொடர்ந்து இந்த மண்ணில் நீடித்து நிலைத்து வாழ முடியும்.

அந்த அடிப்படையில் ஆளும் மத்திய அரசும், அவர்களுக்கு கைகூலிகளாக இருந்து செயல்படும் மாநில சாதி ஆட்சியாளர்களும் செயல்பட்டு வருவதை முடிவுகட்ட நாம் கிளர்ந்தெழ வேண்டிய நேரம் இது.

வெகுமக்களின் விடுதலை பணியில்...

**மன்னர் மகாராஜன்**
மாநில தலைவர்
பகுஜன் திராவிட கட்சி
78679 74235



# தமிழில் அடிச்சொற்கள்

தென்னிந்திய மொழிகளில் அடிச்சொற்கள் (ரூட்ஸ்) தெளிவாய்ப் பிரித்தறியும் நிலையில் உள்ளன. சொற்களின் அடிப்படையான கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றன. அவை பெரும்பாலும் ஓரசைச் சொற்களாகவே இருக்கின்றன.

சொல்கின்றான் சொல் : அடிச்சொல்

வருகின்றாள் வா : அடிச்சொல்

பழுத்தது பழு : அடிச்சொல்

(உகரம் ஒலிநயம் பற்றி வந்தது)

திராவிட மொழியில் முதல் முதலில் ஓரசைச் சொற்களே இருந்து வந்தன என்பது கால்டுவெல் கருத்து. எல்லா மொழிகளிலும் தொடக்கத்தில் பலவகைச் சொற்கள் இருந்தன என்றும், படிப்படியே அவை மருவியும் திரிந்தும் ஓரசைச் சொற்களாக மாறுவதே மொழிகளின் இயல்பு என்றும் யெஸ்பெர்சன் கருதுகிறார். இது இன்றும் மொழி வளர்ச்சியில் காணத்தக்க உண்மையாகும். ஆதலின், பழைய திராவிடத் தாய்மொழியில் நீண்ட சொற்கள் இருந்து வந்தன என்றும், அவையே சிறு சிறு சொற்களாகக் கல், மண் முதலியனவாக நின்றுள்ளன என்றும் எண்ண வேண்டுவதாக உள்ளது. இவ்வாறு சொற்கள் ஓரசைச் சொற்களாக மாறுவதற்குக் காரணமான மொழி வளர்ச்சியை அளந்து கூறல் இயலாது. அதற்கு நெடுங்காலம் சென்றிருக்கும். இடையிடையே ஒலித்திரிபுகளும் எத்தனை வகையாகவோ நிகழ்ந்திருக்கும் இறுதியில் பேசுவதற்கு எளியனவாகவும் தக்கனவாகவும் இப்போது வழங்கும் வடிவங்களைப் பெற்று நிற்கின்றன. இவ்வாறு திரிந்து அமைந்த கல் மண் முதலிய சொல் வடிவங்கள் பழந்தமிழ்ச் செய்யுட்களிலும் காணப்படுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய செய்யுட்களிலும் காணப்படுதலால், இந்தச் சொற்களின் பழமை தெளிவாகின்றது.

திராவிட மொழிகளின் அடிச்சொற்களுக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிகளின் அடிச் சொற்களுக்கும் வேறுபாடு பெரிது. இந்தோ ஐரோப்பிய மொழிகளின் அடிச்சொற்கள் பேச்சு மொழியில் என்றும் வழங்காதன என்று யெஸ்பெர்சன் கருதுகின்றார். அவை இலக்கண நூலார் படைப்பே அல்லாமல், வழக்கில் உள்ள சொற்கள் அல்ல. அடிச் சொற்கள் என்பவை ஒத்த சொற்களை ஆராய்ந்து கண்டெடுக்கப்பட்டவையே அன்றி, பழங்காலத்தில் மக்களால் பேசப் பட்டுவந்தவை அல்ல என்ற கருத்தே புளூம்பீல்ட் முதலான மொழிநூலார் பலரிடையிலும் நிலவியது. ஆனால் திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் இலக்கண நூலார் படைப்பு அல்ல, நாள்தோறும் வழங்கும் சொற்கள், இலக்கியத்திலும் பண்டைக்கால முதல் இடம் பெற்று வாழும் சொற்கள்.

நடந்தான் என்னும் வினைமுற்றின் அடிச் சொல்லாக உள்ள நட என்பது இன்றும் பேச்சு வழக்கில் உள்ளதே. நட என்பது ஏவலொருமையாக வழங்குகின்றது. இவ்வாறே வினைச் சொற்களின் அடிச்சொற்கள் எல்லாம் ஏவலொருமையாக வழங்கக் காணலாம். பவணந்தி முனிவர் வினையடிகளை 'ஏவல் வினைப்பகாப்பதம்' என்று குறித்தது பொருத்தமானதேயாகும். திராவிட மொழிகளின் பொது இயல்பாகிய இது, நெடுங்காலத்திற்கு முன்பே தனித்துப் பிரிந்து பெலுஜிஸ்தானத்தில் வழங்கும் பிராஹூய் மொழியிலும் இன்றும் காணப்படுகின்றது. இவ்வுணமை உணராத வீர சோழிய ஆசிரியர் வடமொழியைப் பின்பற்றித் தமிழ் வினைச் சொற்களுக்குப் பகுதிகளைப் புதியனவாகப் படைத்துக் கூறலானார்.

அடிச்சொற்கள் தனித்தனியே நின்று சொற்றொடராகிப் பொருள் தருதல் உண்டு. 'நீ வா' 'கல்' 'பார்' முதலான வாக்கியங்கள் அத்தகையன. சீன மொழியில் தொடர்கள் அவ்வாறே அமைந்தனவே. அம்மொழியில் அடிச்சொற்களே சொற்கள். அவற்றைவிட வேறு சொற்கள் இல்லை.

‘கல்லைப் பார்த்தான்’ என்ற தொடரில், கல், பார் என்னும் அடிச்சொற்கள் தனித்தனியே நிற்காமல் ஐ முதலான இடைச்சொற்கள் சேர்ந்து சொற்களாய் நின்று பொருள் தருகின்றன. இந்த முறையே திராவிட மொழிகளில் பெரும்பாலும் உள்ளது.

பொருள் வேறுபாடு புலப்படுத்த அடிச்சொல்லோடு சேர்க்கப்படும் பிற சொற்களை இடைச்சொற்கள் எனத் தமிழ் இலக்கணம் கூறும். அந்த இடைச்சொற்கள் பல வகைப்படுவன. அவைகளும் தொடக்கத்தில் தனித்தனிப் பொருள் உணர்த்தி அடிச் சொற்களாக இருந்தவையே. படிப்படியே அவை தமக்குரிய பொருளை இழந்து துணை உறுப்புகளாக நிற்கின்றன.

| அடிச்சொல் | சொல்சேர்ந்த | உறுப்பு |
|---|---|---|
| ஆ | ஆகு | கு |
| விழு | விழுங்கு | கு |
| பன் | பஞ்சு | சு |
| நீர் | நீந்து | து |
| கால் | காம்பு | பு |

இந்தோஐரோப்பிய மொழிகளிலும் இவ்வாறு அடிச்சொல்லோடு பிற சொல் சேர்ந்து சொல்லாய் வழங்குதல் உண்டு. ஆனால், அம்மொழிகளில் அடிச் சொல்லும் சேர்ந்த சொல்லும் இவை இவை எனத் தனித்தனியே பிரித்தறிதல் அரிது. அவை சிதைந்து கலந்து பிரிக்க முடியாதனவாக மாறியுள்ளன. திராவிட மொழிகளில் அவற்றைப் பிரித்தல் எளிது. இதுபற்றியே இந்தோஐரோப்பிய மொழிகளை உட்பிணைப்பு நிலை மிக்கவை என்றும் திராவிட மொழிகளை ஒட்டு நிலை மிக்கவை என்றும் குறிப்பர்.

திராவிட மொழிகள் ஒட்டுநிலை மிக்கனவாக இருத்தலால் இருவகை இயல்பு அவற்றிடைக் காண்கின்றோம். ஒன்று, அடிச்சொல் தெளிவாக அறிய நிற்றல், மற்றொன்றை, அடிச்சொல் சிதையாவாறு நிற்கவேண்டி, அதனுடன் சேரும் உறுப்புக்கள் தெளிவாக ஒட்டி நிற்றலால் பலவகைச் சொல்லாய் நீளல். கற்பிக்கின்றான் என்ற சொல்லில், கல் என்னும் அடிச்சொல் தெளிவாக நிற்றல் காண்க. சேர்ந்த உறுப்புக்கள் சிதைந்து ஒன்றாகாமல், ஒட்டி வளர்ந்து நாலசைச் சொல்லாய் நீளலும் காண்க. திராவிட மொழிகளில் பலவகைச் சொற்கள் பெருகியிருத்தற்குக் காரணம் இதுவே. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் உள்ள மொழிகளின் சொற்களைவிட திராவிட மொழிச்சொற்கள் நீண்டவை என்றும், நீட்சியில் அமெரிக்க மொழியின் பல அசைச் சொற்களுக்கு அடுத்தபடியாகக் கருதத்தக்கவை என்றும் கால்டுவெல் கூறுகின்றார்.


**தொடரும்...**

***(மொழிநூல் மு. வரதராசனார்)***


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ. 15,000/- (முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**

## தற்போது விற்பனையில்






பெ. மணியரசன் எழுதிய
**பா.ச.க. பாசிச எதிர்ப்பின் பாதை**
பக்கம் : 48 / விலை : ரூ. 35/-

கி.வெங்கட்ராமன் எழுதிய
**கொரோனாவுக்கு பின் மாற்று பாதை**
பக்கம் : 56 / விலை ரூ. 45/-

நூல் கிடைக்குமிடம்

பன்மை வெளி

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078
**பேச :** 044 - 2474 2911, 94439 18095, 98408 48594
**இணையம்** : www.panmaiveli.com |
மின்னஞ்சல் : panmaiveli@gmail.com



# கான(ா) குயில் இசைவாணி!

கானா பாடல்கள் என்றாலே, ஆண்களின் குரல் மட்டுமே நம் அனைவரின் செவிகளிலும் முதலில் ஒலிக்கும். அந்த அளவிற்கு ஆண்களின் பங்களிப்பு அதிகமுள்ள துறையாகவே கானா பாடல்கள் துறை உள்ளது. அந்த பிம்பத்தை தகர்த்தெறிந்துள்ளார் வடசென்னையைச் சேர்ந்த கானா பாடகி இசைவாணி.

சமீபத்தில் பி.பி.சி. செய்தி நிறுவனம் 2020ஆம் ஆண்டிற்கான சிறந்த 100 பெண்மணிகள் பட்டியலை வெளியிட்டது. அந்த பட்டியலில் இடம்பிடித்த நான்கு இந்தியப் பெண்களில் இசைவாணியும் ஒருவர். படைப்பாற்றல் பிரிவில் இடம்பிடித்த 21 நபர்களுள், ஒரே இந்தியப் பெண் என்கிற வகையில், தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியாவிற்கே பெருமை சேர்த்துள்ளார் இசைவாணி.

'கானா துறையில் கோலோச்சும் ஆண்களுக்கு இணையாக, ஒரே மேடையில் ஒரு பெண் கானா இசைப்பதே சாதனைதான்' என்று பி.பி.சி. நிறுவனமும், இசைவாணிக்கான தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளது.

வடசென்னையின் ராயபுரம் பகுதியைச் சேர்ந்த இசைவாணியின் தந்தை, மெல்லிசைக் குழு ஒன்றில் கீபோர்ட் வாசிப்பவராக இருந்ததுள்ளார். அப்பாவின் மெல்லிசைக் கச்சேரிகள் மற்றும் அவரது நண்பர்களின் கலந்துரையாடல்களே இசைவாணியின் இசை ஆர்வத்தைத் தூண்டியுள்ளன. 12ஆம் வகுப்பு படிக்கும் போதே குடும்பச்சூழல் காரணமாக, தனது படிப்பைப் பாதியிலேயே நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட இவர், தனது இசைப் பயணத்தை மட்டும் தொடர்ந்துள்ளார். கச்சேரிகளில் பல சினிமாப் பாடல்களைப் பாடிவந்த இசைவாணி, பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டதால், எதேச்சையாக ஒரு மேடையில் 'கானா' பாடலைப் பாடியுள்ளார்.

அப்போது 'கானா' பாடுவதில் தனக்குள்ள திறமையைக் கண்டு தானே வியந்து போனதாகவும், அதன் பின்னரே 'கானா' மீதான ஆர்வம் வளரத் தொடங்கி யதாகவும் அவரே குறிப்பிட்டுள் ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு இயக்குநர் பா. ரஞ்சித் ஆரம்பித்த இசைக்குழுவில் இடம் பிடித்த 21 பாடகர்களுள் ஒரே பெண் 'கானா' பாடகர் இசைவாணி. எப்போதும் ஆண்களின் குரலிலேயே, அடுக்கு மொழிகளைக் கொண்ட கானா பாடல்களைக் கேட்ட ரசிகர்களுக்கு, இவரது குரல் ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது.

அதே சமயம் இசைவாணியின் கானா திறன் அதிகவேகமாகவே இவருக்கான அங்கீகாரத்தையும் மக்களிடமிருந்து பெற்றுத் தந்தது.

அரசியல் கேளிக்கைப் பாடல்கள், சாதிய அடக்கு முறைக்கு எதிரான பாடல்கள் என சமூக அநீதிகளுக்கு எதிரான தனது கருத்துகளையும், கானா பாடல்கள் வழியாக இவர் பதிவு செய்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# நல்லாசிரியர் அருணாச்சலம்

வேலூர் மாவட்டம், மலையடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூர்த் தொடக்கப்பள்ளியில் வகுப்பு...

"டேய், வெங்கடேசா! வீட்டுப்பாடம் கூடச் செய்யாமே, ஏண்டா வந்தே? வாடா இங்கே.

ஆசிரியர் அழைக்க, அவரிடம் மூன்றாம் வகுப்பில் பயிலும் சிறுவனான வெங்கடேசன் வந்தான்.

"நானும் ரெண்டு மூனு நாளா பார்த்துக்கிட்டுத்தான் வர்றேன். நீ வீட்டுப் பாடங்களை எடுத்துட்டு வர்றதும் இல்ல. படிச்சிட்டு வர்றதும் இல்ல. உன்னையெல்லாம் நல்லா வெளுக்கணும்டா"

ஆசிரியர் தன் கையிலிருந்து பிரம்புக் குச்சியால் வெங்கடேசன் தலையில் ஒரு தட்டு தட்டினார். தலையில் விழுந்த அடியைத் தடவிக் கொடுத்தபடி தன் இருக்கைக்குத் திரும்பினான்.

ஆசிரியர் அருணாசலம் கரும்பலகையை துணியால் துடைக்கத் திரும்பினார்.

அப்போது, "சார், வெங்கடேசன் தலையிலிருந்து ரத்தம் வருது சார்" என்று அவன் பக்கத்திலிருந்த மாணவன் குரல் கொடுத்தான்.

பதறிப்போன ஆசிரியர் அருணாசலம் அவனிடம் சென்று, அவன் தலையைப் பார்த்தார். அவர் கொடுத்த பிரம்படியால், ஏற்கனவே அவன் தலையிலிருந்த புண்ணில் பட்டு இரத்தம் வடிந்தது.

அவசரச் சிகிச்சையாக சாக்பீசைப் பொடியாக்கி, இரத்தம் வந்த இடத்தில் வைத்து முதலுதவி செய்தார்.

"சார்! தலை ரொம்ப வலிக்குது. வீட்டுக்குப் போகட்டுமா சார்" என்று அழாத குறையாகக் வெங்கடேசன் கேட்டான்.

"சரி, நீ இப்ப வீட்டுக்குப் போ. உன் அம்மாகிட்ட சொல்லி, மருந்து ஏதாவது வீட்டில் இருந்தா போடச் சொல்லு. நான் சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டதும் உன் வீட்டிற்கு வந்து உன் அம்மாவிடம் பேசிக் கொள்கிறேன்".

ஆசிரியர் அனுமதி கொடுத்ததும் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போனான் வெங்கடேசன்.

பகல் உணவு இடைவேளை.

வெங்கடேசனின் தலையில் ஆசிரியர் அடித்து ரத்தம் வந்த செய்தி தலைமையாசிரியர் காதுகளுக்கு எட்டி விட்டது. அவர் ஆசிரியர் அருணாசலத்தைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"அருணாசலம் சார், நீங்க அடிச்சீங்களே, அந்த வெங்கடேசனின் தந்தை யாருன்னு தெரியுமா"

"தெரியும் சார்... அவரு பேரு கருப்பையா..."

"அவரு பேரை நான் கேட்கல. அவர் என்ன தொழில் செய்யறார் தெரியுமா?"

"அது வந்து... கள்ளச் சாராயம் காய்ச்சி விக்கிறார் சார்".

"அது தெரிந்துமா, அவர் மகனின் தலையில் ரத்தம் வரும்படி அடிச்சீங்க? நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. எனக்கு எந்தக் கம்பளைண்டும் வராதபடி பாத்துக்க வேண்டியது உங்க பொறுப்பு தான்".

தலைமையாசிரியரின் 'பேச்சுகளை' வாங்கிக் கட்டிக் கொண்டு பிற்பகல் வகுப்புக்குச் சென்றார் அருணாசலம்.

“சார் வெங்கடேசன், அவன் அப்பாவைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கான். கொடிக்கம்பம் பக்கத்தில இருக்கிற மரத்தடியில் நிக்கிறாங்க”. ஒரு மாணவன் வந்து செய்தியைச் சொல்ல அருணாசலம் விரைந்தார்.

வெங்கடேசனின் அப்பா கருப்பையா, பெயருக்கு ஏத்தபடி நல்ல கருப்பு, அடர்த்தியான தாடி, மீசை, வாட்டசாட்டமான உடல், இவனிடம் பணிஞ்சு, தணிந்து போய்விடுவதுதான் நல்லது என்று எண்ணிக் கொண்டு போனார் ஆசிரியர்.

“கருப்பையா, நான் வேணும்னு உன் மகனை அடிக்கல. அவன் தலையில புண் இருந்தது எனக்குத் தெரியாதுப்பா... தயவுசெஞ்சு பொறுத்துக்க. சத்தம் கித்தம் போட்டு மானத்த வாங்கிடாத... உன் மகன் வெங்கடேசனை நல்ல டாக்டரிடம் கொண்டு போய்க் காட்டுப்பா, எல்லாச் செலவையும் நானே ஏத்துக்கறேன். மன்னிச்சுடுப்பா!” என்று பணிவாகச் சொன்னார். இவர் எதிர்பார்த்தபடி கோபம் கருப்பையாவிடம் இல்லை.

“அட, என்னாங்க சார்! ரொம்ப பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க...! எம்மகன் வீட்டுப்பாடம் எழுதலேன்னுதானே அடிச்சீங்க! இந்த மாதிரி அந்தக் காலத்தில என்னை கண்டிச்சு படிப்புச் சொல்லிக் கொடுத்திருந்தா, நான் ஏன் சாராயம் காய்ச்ச வந்திருக்கப் போறேன். எம்மவனை நல்லா படிக்க வையுங்க. நான் ஒன்னும் கேக்க மாட்டேன்”.

“அவன் ரெண்டு கண்களை மட்டும் வச்சிட்டு, அவன் ஒடம்புத் தோலலை பூரா உரிச்சாலும் நான் கேக்க மாட்டன். என் மகன் நல்லா படிச்சு ஆளாகணும். அவ்வளவு தான் சார்”.

கையெடுத்துக் கும்பிட்டுச் சொன்ன கருப்பையா, தன் மகன் வெங்கடேசனை அழைத்துக் கொண்டு சென்றான்.

ஆசிரியர் அருணாசலம், தனக்கு ‘நல்லாசிரியர் விருது’ கிடைத்தது போல் மலைத்து நின்றார்.

டாக்டர் **இரா. முல்லைக்கோ.**

பெங்களூரு.

## “சும்மா”

நிச்சயம் நீங்கள் அசந்துதான் போவீர்கள். உலகில் தோன்றிய பல மொழிகள் அழிந்து இருந்த இடமே தெரியாமல் போயிருக்கின்றன. தமிழ் மட்டும் இன்றளவும் பேச்சிலும், எழுத்திலும் நீடித்து நிலைத்து தன்னையும், தான் சார்ந்த இனத்தையும் பெருமைப் படுத்திக் கொண்டிருக்கிறது. சும்மா சொல்லுவோம் தமிழின் சிறப்பை, அடிக்கடி நாம் பாவிக்கும் வார்த்தை தான் இந்த சும்மா. அது சரி சும்மா என்றால் என்ன?

பேச்சு வழக்கு சொல்லாக இருந்தாலும் தமிழ் மொழி யில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு வார்த்தை இந்த சும்மா “சும்மா”என்கிற இந்த வார்த்தைக்கு மட்டும் தமிழில் 15 பொருள் உண்டு என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினை, நாம் அடிக்கடி கூறும் இந்த “சும்மா” எனும் வார்த்தை எடுத்துக் காட்டும்.

1. கொஞ்சம் “சும்மா” இருடா? (அமைதியாக/ Quiet)

2 .கொஞ்ச நேரம் “சும்மா” இருந்து விட்டுப் போகலாமே? (களைப்பாறிக்கொண்டு / Leisurely)

3. அவரைப் பற்றி “சும்மா” சொல்லக்கூடாது? (அருமை/in fact)

4. இது என்ன “சும்மா” கிடைக்கும்னு நினைச்சியா? (இலவசமாக / Free of cost)

5. “சும்மா” கதை அளக்காதே? (பொய்/ Lie)

6. “சும்மா” தான் இருக்கு. நீ வேண்டுமானால் எடுத்துக் கொள் – (உபயோகமற்று / Without use)

7. “சும்மா” “சும்மா” கிண்டல் பண்ணுறான். (அடிக்கடி/Very often)

8. இவன் இப்படித்தான்.. சும்மா சொல்லிக்கிட்டு இருப்பான். (எப்போதும்/ Always)

9. ஒன்றுமில்லை “சும்மா” சொல்கின்றேன் – (தற்செயலாக / Just)

10. இந்த பெட்டியில் வேறெதுவும் இல்லை “சும்மா” தான் இருக்கின்றது (காலி / Empty)

11. சொன்னதையே “சும்மா”சொல்லாதே (மறுபடியும்/Repeat)

12. ஒன்றுமில்லாமல் “சும்மா” போகக் கூடாது – (வெறுங்கையோடு / Bare)

13. “சும்மா” தான் இருக்கின்றோம் – (சோம்பேறித் தனமாக/ Lazily)

14. அவன் “சும்மா” ஏதாவது உளறுவான் – (வெட்டியாக/idle)

15. எல்லாமே “சும்மா” தான் சொன்னேன் –(விளை யாட்டிற்கு / Just for fun)

நாம் அன்றாடம் பாவிக்கும் இந்த “சும்மா” என்கிற ஒரு சொல். நாம் பயன்படுத்தும் இடத்தின்படியும் தொடரும் சொற்களின் படியும் பதினைந்து விதமான பொருளைக் கொடுக்கிறது என்றால் அது “சும்மா” இல்லை.

உலகில் உள்ள மற்ற மொழி அனைத்தும் வாயினால் பேச, செவிக்குக் கருத்தை உணர்த்துகின்றவை. ஆனால் தமிழ் மொழி இதயத்தாலே பேசி இதயத்தால் உணர வைக்கும் மொழியாகும்.

கடந்த சில நாட்களாக தமிழகத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற பெயர் திருமதி. சசிகலா. விடுதலை பெறுகிறார் என்பதில் ஒரு பெரும் பரபரப்பு. விடுதலைக்கு முன் கொரோனா நுண்ணு யிரியின் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறார் என்ற பரபரப்பு. அதிலேயே அந்தத் தொற்று உண்மையில் வந்ததா? அல்லது அவர் வெளியில் வந்துவிடக்கூடாது என்பதற்காக சதி வேலை செய்யப்பட்டதா என்ற கேள்வி யால் பரபரப்பு. வெகு விரைவாக குணமாகி மருத்துவ மனையில் இருந்து வெளியே வருகையில் அதிமுக கொடி கட்டிய காரில் வந்ததால் பரபரப்பு என்று, தமிழக அரசியல் திருமதி. சசிகலா அவர்களையே சுற்றிக் கொண்டிருக்கிறது என்றால் அது பொய்யல்ல, மெய்.

அதிக நாட்களெடுத்து அழகுற அமைக்கப்பட்ட செயலலிதாவின் நினைவிடம், சசிகலா விடுதலையாகி தமிழகம் வருவார் என் எதிர்பார்க்கப்பட்ட நாளில் திறந்தார்கள். சசிகலா அவர்கள் வருகையின்போது, கூட்டம் அங்கே சென்று விடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு என்று நடுநிலையாளர்களும் சசிகலா விசுவாசிகளும் எண்ணினார்கள். ஆனால், கொரனா வால் சசிகலா அவர்கள் தமிழகம் வருகிற நாள் மாறிய போது, செயலலிதாவின் நினைவிடம் சில பராமரிப்பு வேலைகளுக்காக மூடப்படுகிறது என்ற அரசு அறிவிப்பு, சசிகலாவின் தமிழக வருகையை ஒட்டிதான் வெளியிடப்பட்டிருக்கிறது என்று எண்ணத் தூண்டும் வகையில் இருக்கிறது.

இதற்கிடையில், சசிகலா அவர்கள் அதிமுக கொடி யைப் பயன்படுத்தியது தவறு என்று, அமைச்சர்கள் புகார் செய்கிறார்கள் காவல்துறை உயர் அதிகாரியிடம். தமிழகத்திற்குள் வரும்போது கொடி யைப் பயன்படுத் தக்கூடாது என்று மற்றொரு புகார், அதே அதிகாரி யிடம். முதலமைச்சரின் நேரடிக் கட்டுப் பாட்டில் இருக்கிற துறைகளில் ஒன்றுதான் காவல் துறை. ஆனால், அமைச்சர்கள் அந்த அதிகாரி நோக்கிப் படையெடுத் திருக்கிறார்கள். தன்னிச்சையாக செயல் படக்கூடியவரா காவல்துறை அதிகாரி? ஏன் இந்த அச்சம் ஆளும் அமைச்சர்களுக்கு?

அச்சத்திற்கு காரணம் சசிகலா அவர்களின் ஆளுமைதான், ஆற்றல்தான். இது தமிழக மக்களுக்குத் தெரியும். ஓரிரு மாதங்களாக தமிழக அரசு, திருமதி. சசிகலா அவர்கள் தொடர்பாக எடுத்திருக்கிற முடிவுகள், மக்கள் மத்தியில் சசிகலாவின் செல்வாக்கை உயர்த்தியிருக்கிறது என்பதே உண்மை. அதிமுக கட்சித் தொண்டர்களில் பெரும்பான்மையினர் சசிகலா அவர்களின் பக்கமே இருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிக் கொண்டிருக்கிறது. சசிகலா அவர்களை வெறுத்த பொதுமக்களில் பலரும், மாற்றுக் கட்சியி னரும் கூட திருமதி சசிகலாவின் ஆதரவாளர் களாக மாறிக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது.

தமிழ்நாடு அரசியலில், அதுவும் முக்கியமாக அதிமுக வில் பெரும் மாற்றங்கள் நிகழக்கூடிய அறிகுறிகள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. சசிகலா என்ற சூழ்கொண்ட மேகம் திரண்டு நிற்கிறது. எப்போது மழை பொழியப் போகிறது, அந்த மழை வெள்ளமாகப் போகப் போகிறதா? வேளாண் நிலங்களையும், நீர்நிலை களையும் வளமாக்கப் போகிறதா? என்று இன்றும் சில நாட்களில் தெரியவரும். திருமதி. சசிகலாவின் ஆற்றல் தமிழகத்திற்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்பதுதான் மக்களின் ஆவலாக இருக்கிறது.

# ஆற்றலாளர் சசிகலா!



# தமிழ் மன்னர்கள் கோவில்களைக் கட்டுவதற்கு வழிகாட்டிய அந்தணர்கள்

## சித்தர்களா? பார்ப்பனர்களா?



1. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

பிறவாழி நீந்தல் அரிது என்றும்

2. அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகலான் என்றும்

3. கடவுளாகவும் கடவுள் தன்மை கொண்ட மனிதனாவும் விளங்குகிறவர்கள் அந்தணர்கள் என்று விளக்கம் கொடுக்கின்றார் திருவள்ளுவர்.

4. கடவுளாக விளங்கும் அந்தணரை, 'ஐந்தவித்தான்' என்று கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

5. மனிதனாக விளங்கும் அந்தணரையும் ஐந்தவித்தான் என்று குறிப்பிடுவதன் வழி, மனிதனாக வந்த ஐந்தவித்தான் ஆற்றலுக்கு, அகல் விசும்பிளார் கோமானாகிய இந்திரனே சான்றாக விளங்குகின்றான் என்னும் வரலாறு ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

6. இந்த வரலாற்றைச் சரியாக நாம்புரிந்து கொள்ள ஏதுவாக பாரதியார்,

"ஈசன் வந்து சிலுவையில் மாண்டு,

எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்

நேசமா மரியா மகதலேனாள் நேரிலே இந்தச்

செய்தியைக் கண்டாள்"

7. சிலுவையில் மாண்டு

உயிர்த்தெழுந்த ஈசன் இயேசு பெருமான் என்பது விளக்கப்படுகிறது.

8. ‘இயேசு’ என்னும் பெயர், தமிழ் இலக்கண முறைப்படி உயர்திணை, ஆண்பால் ஒருமை விகுதி சேர்க்கப்பட்டு ‘ஈசன்’ என்று குறிக்கப்படுகிறது.

தமிழகத்தில் கோவில்கள் கட்டப்பட வழிகாட்டிய அந்தணர்கள் சித்தர்களே!

9. இயேசுவுக்கு உலகம் முழுவதும் கோவில்கள் கட்டப்பட்டிருப்பதைப் போன்று தமிழ் நாட்டிலும் கோவில்கள் கட்டப்பட்டன.

10. இந்தக் கோவில்கள் கட்டப்படுவதற்கு வழி காட்டிகளாக இருந்த அந்தணர்கள் சித்தர்களே தவிர பிராமணர்கள் அல்லர் என்பது வரலாறு.

11. இராசராசசோழன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் கருவூர்சித்தர் ஆவார்.

12. இதனால் கருவூர் சித்தருக்கே தஞ்சைப் பெரிய கோவிலில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம். இன்றும் நேரில் சென்று நாமே பார்க்கலாம்.

பிராமணர்கள், கடவுளுக்கும் கோவிலுக்கும் எதிரானவர்கள்.

13. பிராமணர்கள் என்போர் சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்று மனிதர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, மனிதர்களிலே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தி, ஒற்றுமையைச் சிதைக்கும் மனுநூல் அரசியல் கொள்கையையுடையவர்கள்.

14. மனுநூல் கொள்கையே நியாயமானது என்றால் அதுவே மனுதர்மம் என்று வற்புறுத்தும் அதர்மக் கொள்கையாளர்களே பிராமணர்கள் என்பதை அனைவரும் அறிவர்.

15. பிராமணர்கள் “நானே கடவுள், வேறு கடவுள் கிடையாது“ என்று கூறும் “அகம் பிரமாஸ்மி“ கொள்கையை உடையவர்கள்.

16. இதனால், கடவுளை அறியாதவர்கள், கடவுள் கொள்கையை எதிர்ப்பவர்கள்.

17. கடவுளையும், கடவுள் கொள்கையுடையவர் களையும் கடவுளுக்குக் கட்டப்பட்டிருக்கும் கோவில் களையும் வெறுப்பவர்கள்.

18. இந்த வெறுப்பின் காரணமாகக் கோவிலுக்குள் வழிபடச் செல்லுபவர்களை இழிவானவர்களாக நிந்திப்பவர்கள்.

19. தப்பித் தவறி கோவிலுக்குள் நுழைய நேரிட்டால், கொடிமரத்தைத் தாண்டி உள்ளே போகக்கூடாது என்னும் கொள்கையைக் கடைபிடிப்பவர்கள்.

### பிராமணர்களின் கடவுள் தீயே

20. பிராமணர்கள், குளிர்நாட்டிலிருந்து இந்தியா வுக்குள் வந்த பரம்பரையினராகையால், குளிரைப் போக்க உதவும் தீயை வணங்குபவர்கள்.

21. தீயில் ஆடு மாடுகளைச் சுட்டு, சோமபானம், சுராபானம் முதலிய மது வகைகளுடன் உண்பதே பிராமணர்களுடைய வழிபாட்டு முறையாகும்.

22. இந்த வழிபாடுகளே பிராமணர்களுடைய வேதத்தில் கூறப்பட்டுள்ளன.

23. இதனால் தீயை வளர்த்தலும், தீயில் ஆடுமாடுகளைச் சுடுதலும், சோமபானம் சராபானம் ஆகிய மது வகைக்ளுடன் உண்டு குடித்தலே பிராமணர்களின் வழிபாட்டு முறை.

### அக்கினி குண்டம்

24. இந்த வழிபாட்டு முறைப்படி, செயல்படுபவர் களாகிய பிராமணர்கள் கோவில் குட முழுக்குக்கு அழைக்கப்பட்டால், பிராமணர்கள் தீயை வணங்க அக்கினி குண்டம் அமைத்து, அக்கினியை வளர்த்து அக்கினியே கோவிலில் இருக்கும் கடவுள் சிலைக்கு சக்தி கொடுப்பதாக நம்ப வைப்பார்கள்.

### சிவப்பு நூல்

25. கோவிலிலுள்ள கடவுள் சிலைக்கும் சக்தியை ஏற்றுவதற்காக அக்கினிக் குண்டத்திலிருந்து சிவப்பு நூல் ஒன்றைக் கட்டி சிவப்பு நூல் வரியாக, அக்கினிக் குண்டத்திலிருந்து சக்தி கடவுள் சிலைக்குச் சென்று கடவுள் சிலை சக்தி அடைவதாக மக்களை நம்ப வைப்பார்கள்.

26. கடவுளை வழிபடும் மக்கள் தங்கள் அறியாமையின் காரணமாகத் தாங்கள் வழிபடும் கடவுளுக்குச் சக்தியைக் கொடுப்பது பிராமணர்களால் வழிபடப்படும் தீயே என்பதை ஏற்றுக் கொண்டு பிராமணர்களைச் சிறப்பிக்கின்றனர்.

27. இந்த நிலையில், பிராமணர்கள் கடவுள் வழிபாட்டில் தமிழ் மக்களை ஏமாற்றுவதையும், தமிழ் மக்கள் ஏமாறுவதையும் நாம் கண்டு வருகின்றோம்.

### வெள்ளைத்தோல் பிராமணப் பெண்கள்

28. இவ்வாறு மிக மிகச் சிறுபான்மையான பிராமணர்கள் வாழும் தமிழ்நாட்டில், மிக மிகப் பெரும்பான்மையாக வாழும் தமிழர்கள் ஏமாற்றப்படு வதற்குக் காரணமாகப் பிராமணர்களுக்குத் துணையாக இருப்பவர்கள், தமிழ்நாட்டின் ஆட்சியில் இருக்கும் தலைவர்கள்.

29. ஆட்சியாளர்களைத் தங்கள் வலையில் வீழ்த்து வதற்கு ஏற்ற கருவிகளாக ஆயுதங்களாகப் பயன் படுத்தப்படுபவர்கள், பிராமணர்களுடைய வெள்ளைத் தோல் பெண்கள்.

30. பிராமணர் வீட்டுப் பெண்கள், தமிழ் ஆட்சி யாளர்களை மயக்குவதற்காக, இசை, நடனம், இங்கிதமான பேச்சு முதலியவைகளில் பிராமணர்களால் பழக்குவிக்கப்படுகின்றார்கள்.

31.பிராமணர்களின் அதர்மமாகிய பிராமணத் தர்மத்தைக் காக்க பிராமணப் பெண்கள் முன் வர வேண்டும் என்ற பிராமணர்கள் அனுப்பியுள்ள சுற்றறிக்கைகள் உள்ளன.

32. இவற்றைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் நாம் எழுதியுள்ள சைவ சமயத் தலைவரான நந்தனாரையும் வைணவத் தலைவரான திருப்பாணாழ்வாரையும் அநியாயமாகப் பிராமணர்கள் கொலை செய்தது ஏன்? என்னும் தலைப்பிலான நம்முடைய புத்தகத்தை வாசிக்க வேண்டுகிறோம்.

33. இதனால் தமிழ் மன்னர்கள் கோவில்கள் கட்டுவதற்கு வழிகாட்டிய அந்தணர்கள் சித்தர்களே என்பதையும் பிராமணர்கள் என்பது தமிழ் மக்களை ஏமாற்றும் பிராமணர்களின் சதிக்கு உட்பட்டவர்களின் கூற்று என்பதையும் வரலாற்று வழியில், நிலைநாட்டிக் காட்ட நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கின்றோம் என்பதை, இவ்விடத்தில் தெரிவிப்பதுடன், அதற்கான ஆதாரங்களையும் தெளிவுபடுத்தியுள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**அங்கோர்வாட் கோவில் குடமுழுக்கு**

34. இதை இங்கு தெளிவுபடுத்துவதற்குக் காரணம், கம்போடிய நாட்டிலுள்ள அங்கோர்வாட் கோவில் கட்டப்படுவதற்கு அடிப்படைக் காரணம், தமிழ்நாட்டுப் பிராமணர்கள் என்று எழுதப்பட்டுள்ள தவறான எழுத்துகள் எனப்தை இங்கு தெளிவுபடுத்துகின்றோம்.

35. யுனஸ்கோவினால் சிறப்பிக்கப்படும் அங்கோர்வாட் கோவில்களின் கட்டிடங்கள், வெறும் கட்டிடங்கள் மட்டுமல்ல, அவை கோவில்கள் பக்திக்கு உரியவை என்பதை யுனஸ்கோவிற்கும் உலக மக்களுக்கும் நிலைநாட்டிக் காட்ட வேண்டிய கடமையை, இப்பேரண்டத்தை ஆளும் கடவுள் நமக்குக் கொடுத் திருக்கின்றார்.

36. தமிழர்களின் வரலாற்றையும் தமிழர்களின் கோவில் கட்டடக் கலையையும், தமிழர்களின் பக்தியையும், தமிழர்களின் கடவுள் கொள்கையையும் உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பதே கம்போடிய நாட்டிலுள்ள அங்கோர்வாட் முதலிய கோவில்கள் ஆகும்.

37. இந்தக் கோவில்களின் வரலாற்றை எழுதுபவர்களில், பிராமணர்களின் பக்தர்களும் இருக்கின்ற காரணத்தால், பிராமணர்களுக்கும் கம்போடியா நாட்டுக் கோவில்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்னும் வரலாற்று உண்மை தெளிவுபடுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது.

38. நாம் கம்போடியா சென்று, அங்குள்ள கோவில்களின் கட்டடக்கலை சிறப்புடன், அவை பக்திக்குரியவை என்பதையும் நிலைநாட்ட, அங்கோர்வாட் கோவிலுக்கு குடமுழுக்குச் செய்யும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றோம்.

39. குடமுழுக்குச் செய்வதற்கு சுமார் நூறு கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

40. இந்த முயற்சி தமிழ் இனத்தை மீட்கும் முயற்சியோடு தொடர்புடைய முயற்சியாக இருப்பதால் நம்மை அழைத்து வழி நடத்தி வரும் கடவுள், எல்லாவற்றையும் செய்ய வல்லவராக இருக்கின்றார் என்பது நம் அனுபவம்.

41. நாம், வல்லவராகிய இப்பேரண்டத்தை ஆளும் கடவுள் கையில் இருக்கும் அற்ப புல் என்னும் உணர்வு நமக்கு எப்போதும் இருக்கிறது.

42. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது பழமொழி.

நன்றி : **தமிழர் சமயம் பிப்ரவரி 2021 இதழ்.**




**பார்ப்பனர்களே இந்த நாட்டை விட்டே ஓடிவிடுங்கள்! பார்ப்பனர்களே இந்த நாட்டை விட்டே ஓடிவிடுங்கள்! அல்லது இந்த மண்ணில் கரைந்து, காற்றில் கலந்து மறைந்து விடுங்கள்! அப்போதுதான் இந்தநாடு எழுச்சிபெறும் ஏற்றம்பெறும்! நீங்கள் சூன்யம்! நீங்கள் மாயை! கானல் நீர்! மக்களை நாசமாக்கும் குழப்பல் பேர்வழிகள்!**

**– விவேகானந்தர்**

*ஆதாரம் : எழுமின் விழிமின்!– (ஹிந்து? ராஷ்டிரத்துக்கு அறைகூவல் பக்-150-152)*

# மேடைத் தமிழ் வளர்த்த மேதைகள்

## ம.பொ.சிவஞானம்



சுதந்திர இந்தியாவில் மேடைப் பேச்சாளர் தொகை பெருகி வருகின்றது. இதனால், ஒவ்வொரு துறையிலும் பேச்சு மிகுந்து, செயல் குறைந்து வருவதாகக் குறை கூறப்படுகின்றது. இந்தக் 'குறைபாடு' தமிழகத்திலேதான் அதிகமாகக் காணப்படுகின்றதாம். இது பற்றி, தமிழகத்தின் முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாத்துரை அவர்கள் தந்துள்ள ஒரு தகவலை இங்கு பார்ப்போம்!

"என்னை வடக்கேயுள்ள பாராளுமன்றக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கேட்டார், "ஒவ்வொரு நாளும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, சலிப்பாக இல்லையா?" என்று. நான், என்னைத்தான் கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டு, 'இல்லை ஐயா' என்றேன். "உங்களுக்கல்ல ஐயா, பொது மக்களுக்குச் சலிப்பாக இல்லையா?" என்று கேட்டார். ஏனென்றால், வடக்கேயுள்ளவர்கள், அரசியலை அடிக்கடி எடுத்துப் பேசினால் சலிப்பாக இருக்கிறதென்று கருதுகிறார்கள்."

இந்தியாவிலே அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு நாள்தோறும் கூட்டங்கள் நடத்தி பிரச்சாரப் பேரிகை கொட்டுகின்றன. இது, நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தோன்றி, சுதந்திரம் பெற்ற பின்னரும் நீடித்துவரும் நிலையாகும். சுதந்திரப் போராட்ட காலத்திலே குறிப்பாக, காந்தி சகாப்தத்திலே பேச்சு மேடையே சுதந்திரம் பெறுவதற்கான பிரதான கருவியாகப் பயன் படுத்தப்பட்டது. அமெரிக்கா, அயர்லாந்து போன்ற நாடுகளிலே விடுதலைப்போர் ஆயுத பலத்தால் நடத்தப்பெற்றது. கொலை, கொள்ளை முறைகளையும் விடுதலை வீரர்கள் கடைப் பிடித்தனர். அதனால், அவர்களில் பெரும்பாலோர் அரசினரின் கொடிய அடக்குமுறைகளுக்கு இரையாகாமல் தங்களைக் காததுக் கொள்ள வேண்டி, தலைமறைவிலிருந்து கொண்டு விடுதலைப் போரை நடத்தினர். ஆகவே, அவர்களால் பேச்சு மேடையை அதிக அளவில் பயன்படுத்த இயலவில்லை.

இந்திய விடுதலைக்குப் போராடிய தேசியாவதிகளின் நிலைவேறு. இங்கு முற்றிலும் சாத்விக முறைப்படி போராட்டம் நடைபெற்றதால், போர் முறைகளிலே ஒளிவுமறைவு இருக்கவில்லை. அத்தகைய முறைகளைக் கையாளக் கூடாதென்பதும் காந்தியடிகளின் கட்டளையாக இருந்தது.

**ஒரு போராட்டத்திற்கும் இன்னொரு போராட்டத்திற்கும் இடையே பத்து ஆண்டுகால அவகாசம் இருந்ததனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இந்த அவகாசத்தில் பிரச்சாரம் செய்வதையே பிரதான பணியாகக் கொண்டனர் தேசியவாதிகள். இதனால் காந்தி சகாப்தத்திலே மேடைப் பேச்சு பிரதான போர்க்கருவியாக இருந்தது புலனாகும். இந்தியாவிலே பிரச்சாரத்தை ஒரு கலையாகவே வளர்த்து வைத்த 'பெருமை' தேசியவாதிகளுக்கே உரியதாகும்.**

திலகர் சகாப்தத்திலே, இங்கொருவர் அங்கொரு வராகச் சில தனி நபர்களோ, குழுக்களோ யூதப் புரட்சியில் ஈடுபட்டதுண்டு. ஆயினும், காங்கிரஸ் மகாசபையைப் பொறுத்தவரையில், ஆயுதப் புரட்சிக்கு அது திட்டமிடவில்லை. அதனால் திலகர் சகாப்தத்திலேயும் சுதந்திரம் பெறுவதற்கான பிரதான சாதனம் பேச்சு மேடையாகவே இருந்தது. உயர்தரக் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற பெருந்தலைவர்களானோர், கல்வியறிவற்ற சாதாரண மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவும் பேச்சு மேடை அந்நாளில் பெரிதும் பயன்பட்டது. இதனால், படித்த பட்டதாரிகளுக்கும் படிக்காத பாமர மக்களுக்கும் நடுவே இருந்த இடைவெளி பெருமளவுக்குக் குறைந்தது. படித்தவர்களைப் பார்த்து, "கிராமங்களுக்குப் போங்கள்' என்று காந்தியடிகள் உபதேசம் செய்வதும் சாத்தியமாயிற்று.

சுதந்திரத்திற்காகப் போராடிய வேறு எந்த நாட்டின் வரலாற்றிலும் காணாத ஒரு புதிய செயல்முறை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் குறிப்பாக, காந்தி சகாப்பதத்தில் கடைபிடிக்கப்பட்டது. அதாவது, கதர் அபிவிருத்தி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, இந்து முசுலீம் ஒன்றுமை, உழவர்தொழிலாளர் முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம் ஆகிய ஆக்கவழிப் பணிகளை நிறைவேற்றுவது நாடு விடுதலை பெறுவதற்கான வழி என்று நம்பப்பட்டது. இந்த ஆக்க வேலைகளுக்காக மாநாடுகள் கூட்டியும் பொதுக்கூட்டங்கள் போட்டும் பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. காந்தியடிகள், சட்டத்தை மீறும் போராட்டங்களைவிட ஆக்க வேலைகளே அன்னிய அரசை வெளியேற்றும் ஆற்றல் பெற்றவையென்று நம்பியதோடு, நாட்டு மக்களையும் நம்ப வைத்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலே 'காந்தி சகாப்தம்' என்பது முப்பதாண்டு காலமாகும். இந்த முப்பதாண்டு காலத்திலே மூன்று முறைதான் சட்டமறுப்புப் போர் நடத்தினார் காந்தியடிகள்.

நாடு தழுவிய முறையில் அடிகளால் நடத்தப்பட்ட முதற்போர், 19211922இல் நடந்த ஒத்துழையாமையாகும். இரண்டாவது போர், 19311932இல் நடந்த உப்புச் சத்தியாகிரகமும் அதனையொட்டி சடந்த சட்டமறுப்புமாகும். மூன்றாவது போர், 194041இல் நடத்திய தனிநபர் சத்தியாக்கிரகமும் அதனைத் தொடர்ந்து அடிகள் துவக்கவிருந்த 'ஆகஸ்டுப் புரட்சி' யுமாகும்.

ஒரு போராட்டத்திற்கும் இன்னொரு போராட்டத்திற்கும் இடையே பத்து ஆண்டுகால அவகாசம் இருந்ததனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இந்த அவகாசத்தில் பிரச்சாரம் செய்வதையே பிரதான பணியாகக் கொண்டனர் தேசியவாதிகள். இதனால் காந்தி சகாப்தத்திலே மேடைப் பேச்சு பிரதான போர்க்கருவியாக இருந்தது புலனாகும். இந்தியாவிலே பிரச்சாரத்தை ஒரு கலையாகவே வளர்த்து வைத்த 'பெருமை' தேசியவாதிகளுக்கே உரியதாகும். பொதுமக்களோடு தொர்படு கொள்வதன் அவசியத்தை பின்னால் தோன்றிய அரசியல் கட்சிகளுக்கு உணர்த்தும் முன்னோடிக் கட்சியாக அந்நாளில் காங்கிரசு விளங்கியது. சுருங்கச் சொன்னால், 'காந்தி சகாப்தம்' என்பது சொற்பொழிவு சகாப்தமாக இருந்ததெனலாம்.

பிரசங்க யுகத்தைத் தோற்றுவித்தவர்களிலே முதல்வரான காந்தியடிகள் பேச்சுக் கலையில் வல்லவர் என்று சொல்வதற்கில்லை. இதனை, அவரே தமது 'சத்திய சோதனை'யில் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால், அவரைப் பின்பற்றியவர்களிலே நாவன்மையுடையோர் மிகுந்திருந்தனர்.

தேசியவாதிகளில் எழுத்தாளர்களாக விளங்கியவர் களிலே பலர், அரிய இலக்கியங்களைப் படைத்துள்ளனர் என்பதனை முன்பே அறிந்தோம். அதுபோல மேடைப் பேச்சிலே வல்லவர்களாக விளங்கியவர்களுடைய பேச்சுக்கள் நூல் வடிவம் பெற்று, அவை இலக்கியக் களஞ்சியத்திலே சேர்க்கப்படவில்லை. இந்தக் குறைபாடு இன்னும் நீடிக்கத்தான் செய்கின்றது. நம் நாட்டுப் பெருந்தலைவர்களுடைய மேடைப் பேச்சுக்கள், அவர்களாலோ, பிறராலோ எழுதி நூலாக்கப்படும் வழக்கம் அன்றுமில்லை, இன்றுமில்லை. இனியும் இல்லாமலே போய்விடுமோ என்னவோ!

பேச்சு மேடையிலே ஆங்கில மொழி பெற்றிருந்த ஆதிக்கத்தையொழித்து அன்னை மொழிக்கு முதலிடந்தேட தமிழ்ப் பெரியார் திரு.வி.க.

அரும்பாடுபட்டார். அதற்காக, பெருங்கிளர்ச்சியே நடத்தினார். தமிழர் மட்டுமே அங்கிய கூட்டத்திலே தமிழரொருவர் ஆங்கிலத்தில் பேசும் அநாகரிகத்தை எதிர்க்குமாறும் மக்களைத் தூண்டினார். அதுபற்றி திரு.வி.க. அவர்களே கூறக் கேட்போம்.

"சென்னை மாகாணச் சங்கம் சார்பில் தஞ்சைதிருச்சி மாநாடு (20, 2141919) தஞ்சையில் கூடியது. தலைமை பூண்டவர் 'இந்தியன் பேட்ரியாட்' ஆசிரியர் திவான் பகதூர் கருணாகர மேனன். அம்மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளுள் ஒன்று தமிழைப் பற்றியது. அதை யான் வழிமொழிந்து பேசுகையில், இனிப் பொதுக் கூட்டங்களில் தமிழர்கள் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டுமென்றும், அயல் மொழியில் பேசுதல் கூடாதென்றும், எவரேனும் அயல் மொழியில் பேசப் புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். அதுபற்றித் 'தேசபக்தன்' வாயிலாகவும் கிளர்ச்சி செய்தேன். என் பேச்சும் எழுத்தும் தக்க பயனை விளைவித்தன. 'தமிழில் பேசலாகாது' என்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்த பெருந்தலைவர்களெல்லாரும் தமிழில் பேசப் புகுந்தனர். பொது மக்கள் கிளர்ச்சியின் முன்னர் எந்தத் தலைவர் என்ன செய்தல் கூடும்? என் வாழ்வில் நிகழ்ந்த முதல் புரட்சி இஃது ஆகும்.

திரு.வி.க குறிப்பிடும் 'சென்னை மாகாணச் சங்கம்' என்பது, அந்நாளில் காங்கிரசுக்கு எதிராக மிகுந்த வலிவோடும் பொலிவோடும் இயங்கிய ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துப் போராடும் பொருட்டு, பிராமணரல்லாத தேசியவாதிகள் தோற்றுவித்ததாகும். அச்சங்கத்தில் தமிழரேயன்றி, ஆந்திரர் கேரளர் கன்னடர் ஆகியோரும் இருந்தனர். அப்படி இருந்தும். அச்சங்கத்தின் பெயரால் தமிழ்நாட்டில் நடத்தப்படும் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் தமிழரானோர் தமிழிலேயே பேச வேண்டுமென்று திரு.வி.க. கோரினரென்றால், அதையும் மலையாளியொருவர் தலைமை வகித்த மாநாட்டிலே தீர்மான வடிவில் நிறைவேற்றி வைத்தாரென்றால், அந்நாளில் திரு.வி.க.வுக்கிருந்த தமிழுணர்ச்சியைப் புகழ்ந்துரைக்க வார்த்தை ஏது?

**பண்டிதை அசலாம்பிகையார்**

திருக்கோயிலூர் பண்டிதை அசலாம்பிகை அம்மையார், மேடைத்தமிழ் வளர்த்த பெருமாட்டிகளில் முதல்வராவார். அவ்வம்மையார், புராண இலக்கியக் கூட்டங்களிலும் அரசியல் கூட்டங்களிலும் திறம்படப் பேசும் நாவன்மை பெற்றிருந்தார். அம்மையாரின் பேச்சுத் திறன் பற்றி திரு.வி.க.தந்துள்ள புகழுரையைப் பார்ப்போம்!

"சென்னையிலே பாண்டித்துரை, நல்லசாமிப் பிள்ளை முதலியோர் தலைமையில் அசலாம்பிகை அம்மையாரின் சொற்பொழிவுகள் நிகழும். அவைகளைக் கேட்கப் பெருங்கூட்டம் கூடும். முதியரும் மொய்ப்பர், இளைஞரும் ஈண்டுவர், பின்னவருள் யானும் ஒருவன். பண்டிதையார் பேச்சிலே கம்பனும் சேக்கிழாரும் காட்சியளிப்பர். அம்மையாரின் சொல் திறம், யான் வீடு சேர்ந்ததும், அவர் எடுத்துக்காட்டிய பாட்டுக்களை ஒருமுறை ஊன்றி நோக்க என்னை ஏவும்."

"1921ஆம் ஆண்டிலே தென்னார்க்காடு ஜில்லா அரசியல் மாநாடு வடலூரிலே என் தலைமையில் கூடியது. அம்மாநாட்டில் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் கலந்து கொண்டார். அங்கேயே அம்மையாரின் தமிழ், அவரையும் என்னையும் தாயுஞ் சேயும் ஆக்கிற்று."

மேடைத் தமிழ் வளர்த்த பேச்சாளர்களிலே கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் ப. ஜீவானந்தம் வருவராவார். அவர், நாட்டின் விடுதலையிலே தமிழின் விடுதலையையும், உழவர்தொழிலாளர் விடுதலையையும் காண விழைந்தார். அவர் பேச்சக்களெல்லாம் திரட்டப் பெற்று நூல் வடிவம் பெற்றிருந்தால், அது புரட்சி மணங்கமழும் ஒரு புது இலக்கியமாக அமைந்திருக்கும். தமிழ்ப் பற்றும் 'தமிழர்' என்ற இனப்பற்றும் அவருடன் கூடப் பிறந்தவை எனலாம்.

●

**தொடரும்...**

## முத்திரைத்தாள் விற்பனை!

தமிழகம் முழுவதும், ஐநூற்றுக்கும் மேலான சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவல கங்களைச் சார்ந்து, ஆவண எழுத்தர்கள், முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் செயல்படு கிறார்கள். இதில் பல ஆண்டுகளாக காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் இடங்களை நிரப்ப, பதிவுத்துறை முடிவு செய்து இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது.

தமிழகம் முழுதும், 1,276 இடங்கள் காலியாக உள்ள நிலையில் 800 இடங்களின் பட்டியல் மட்டும், தற்போது வெளியிடப்பட்டு உள்ளது. பதிவு மாவட்ட வாரியாக காலி இடங்கள் நிலவரத்தை பதிவுத் துறை வெளியிட்டு உள்ளது. கோவை மாவட்டத்தில் மட்டும் நூற்றுக்கும் மேலான இடங்கள் காலியாக உள்ளன. இந்த இடங்க ளுக்கான உரிமம் பெற விரும்புவோர் பிப்ரவரி 12 வரை சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர் அலுவலகத்தை அணுகி, விண்ணப்பங்களைப் பெறலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பிப்ரவரி 12க்குள் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் அளிக்க வேண்டும். இதுகுறித்த சார்பதிவாளர்கள் கூறியதாவது: பதிவுத்துறை அறிவிப்பில், பல பதிவு மாவட்டங்களில் காலி இடங்கள் மறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது.

# தமிழ்நாட்டில் ஆட்சி செய்த பல்லவர்களின் வரலாறு என்ன?

1. பல்லவர்களின் வரலாற்றைக் கணிப்பதில் ஆராய்ச்சி அறிஞர்களிடையே இதுவரை ஒத்த கருத்து உருவாகவில்லை.

2. ஆனால், பல்லவர் வரலாறு பற்றி ஆராய்ந்துள்ள அறிஞர் பெருமக்களில் பலர் பல்லவர் என்பது பஹலவர் என்றும் தட்சசீல அரசரின் மரபினர் என்றும் கணிக்கின்றனர்.

3. இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள் பஹலவர் என்னும் சொல்லுக்கும் பல்லவர் என்னும் சொல்லுக்கும் உள்ள ஒற்றுமையை மட்டுமே வைத்துக் கொண்டு அவர்களைத் தட்சசீல மரபினர் என்று கூறுவது பொருந்தாது என்று கருதுகின்றனர்.

4. இதனால், பஹலவர் என்னும் தட்சசீல மரபினர் வரலாறு பற்றி விரிவாக ஆராய வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. "பல்லவர் என்பது பஹலவர்" என்னும் பெயருடன் தெடர்புடையவர்களே.

5. பஹலவர் என்பது தட்சசீலத்தை ஆண்ட கொண்டபோரஸ் என்னும் மன்னரைப் பற்றிய வரலாற்றில், கொண்டபோரஸ் என்பவர் ஒரு புராண அரசர் என்று வெகு காலமாகக் கருதப்பட்டது.

6. ஆனால், கொண்டபோரஸ் வெளியிட்ட நாணயங்கள் தட்சசீலத்தில் ஏராளமாய்க் கிடைத்த பின்னர், அவர் ஒரு புராணக் கற்பனை அரசர் அல்லர், வரலாற்று அரசரே என்னும் உண்மை வெளிவந்துள்ளது.

தட்சசீல மன்னரும் புனித தோமாவும்

7. உண்மை அரசரே என்னும் வரலாற்று உண்மை வெளிவந்த பின்னரே, கொண்டபோரஸ் என்னும் தட்சசீல மன்னருக்கும் புனித தோமாவுக்கும் உள்ள தொடர்பு வெளிப்பட்டது.

8. இந்தத் தொடர்பு வெளிப்பட்ட காரணத்தால் "புனித தோமா தமிழகம் செல்லவில்லை" என்று மறுப்பு வெளியிட்ட போப் பெனடிக்ட் 16, புனித தோமா தட்சசீலம் சென்று கொண்டபோரஸ் மன்னரைச் சந்தித்து அவரை இயேசு பெருமானின் ஆன்மீக



விடுதலையை ஏற்றுக் கொள்ள வைத்த வரலாற்றை ஏற்றுக் கொண்டு, புனித தோமா 'இந்தியாவின் அப்போஸ்தலர்' என்னும் வரலாற்றை ஏற்றுக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புனித தோமாவால் உருவாக்கப்பட்டதே மகாயான பௌத்தம்

9. புனித தோமா, இயேசு பெருமானை, மனிதர்களின் பாவத்தை நீக்கும் புத்தராக விளக்கிக்காட்டி, ஹீனயானம் அல்லது தேரவாத பௌத்தர்களை, மகாயான பௌத்தர்களாக வளரச் செய்து மகாயான பௌத்த மதத்தை உருவாக்கினார் என்பது வரலாறு.

10. இன்று, உலகின் கிழக்கத்திய பெரிய நாடுகள் பல மாகயான பௌத்த மதத்தைப் பின்பற்றுவதற்குக் காரணமாக விளங்கியவர் புனித தோமா ஆவார்.

11. மகாயான பௌத்த மதத்திற்கு அடிப்படையாக இருப்பது இயேசு பெருமானின் நற்செய்தியே என்னும் உண்மை, மகாயான பௌத்த மத நாடுகளில் விளக்கப்படவில்லை.

12. இதற்குக் காரணம், புனித தோமா தமிழகத்தில் கி.பி 52 முதல் 72 வரை இருபது ஆண்டுகள் ஆற்றிய நற்செய்திப் பணியின் பயன், புனித தோமா வழித் தமிழர் சமயமாகிய இந்து மதமாக விளங்கிக் கொண்டிருக்கும் நிலை இந்நாள் வரை கிறிஸ்தவர்களால் அறிய இயலா நிலையில் இருக்கிறது.

13. இதற்குக் காரணம், கிறித்தவர்கள், இயேசு பெருமானை அறிய இயலாமல், அரசியல் போராளிகளில் ஒருவரான கிறித்துவையே சிறப்பித்து பின்பற்றி வருவதாகும்.

14. இந்த நிலைமை வரலாற்று ஆதாரங்களுடன் 'அதிர்ச்சி தரும் வரலாற்று உண்மைகள்! இயசேு பெருமான் அரசியல் போராளிகளாகிய கிறித்துகளில் ஒருவரா? அல்லது இப்பேரண்டத்தை ஆளும் கடவுளா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்' என்னும் தலைப்பில் 2021 ஜனவரி மாத தமிழர் சமயம் இதழில் வெளியிட்டிருக்கின்றோம்.

15. இயேசு பெருமான் இப்பேரண்டத்தை ஆளும் கடவுள் என்னும் உண்மை, புனித தோமாவழித் தமிழர் சமயமாகிய இந்து மதத்தில், யார் என்ன கேள்வி கேட்டாலும், கேட்கின்றவர் ஏற்றுக் கொள்ளும் முறையில் பகுத்தறிவு வழியில், ஆன்மவியலைக் கொண்டு நிலைநாட்டப்படுகிறது.

16. இவ்வாறு நிலைநாட்டப்படும் நிலையில் விளக்கிக் கொண்டிருக்கும், புனித தோமாவழித் தமிழர் சமயமாகிய இந்து மதம், கிறித்தவர்களால் வெறுக்கப்படும் ஒரு மதமாக கிறித்தவர்களின் அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

17. இதனால், பஹலவர் நாடான தட்சசீலத்தில் உருவான மகாயான பௌத்தமும் தமிழகத்தில் உருவான இந்து மதமும் ஆராய்ச்சியாளர் உலகிற்கு வெளிவராத நிலையில் மறைந்து கிடக்கின்றன.

18. பல்லவர்களால், தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கும் மகாபலிபுரத்திலுள்ள சிற்பங்களின் வரலாறு சரியான முறையில், அறிஞர்களால் அறிய முடியாத நிலையிலேயே இன்றும் இருக்கின்றன.

19. அந்தச் சிற்பங்கள் அனைத்தும் மகாபலியாகிய இயேசு பெருமானின் நற்செய்தியை விளக்கிக் கொண்டிருக்கின்றன.

20. பல்லவர் வரலாறு, மாகபலியின் வரலாறு, இந்து மதத்தின் வரலாறு, இவைகளை நன்கு அறிந்த அறிஞர்களால் மட்டுமே மகாபலிபுரச் சிற்பங்களின் வரலாற்றைச் சரியாக விளக்க முடியும்.

21. இவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டுமானால், டாக்டர் தெ. தேவகலா அவர்களின் டாக்டர் பட்ட ஆய்வேடான 'தமிழ்ப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பிலான நூலைப் படிக்க வேண்டப்படுகின்றார்கள்.

22. ஆகவே பல்லவர் வரலாற்றைச் சரியாக ஆய்வு செய்ய முற்பட்டால், அந்த ஆய்விலே பல வைரச் சுரங்கங்கள் மறைந்து கிடப்பதை நாம் உணர்ந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.




# சோபியா டால்ஸ்டாய்

பெரும்பான்மையான உயர் ஆளமைகளின் பலம் யாவும், வீட்டிலிருந்தே வளர்கிறது. இன்னும் குறிப்பிட்டு கூறவேணுமாயின் மனைவியர்கள், கணவன்மார்களின் வெற்றிக்கு உறுதுணையாக திகழ்கிறார்கள். அவ்வாறு, ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் வாழ்க்கை வழியெங்கும் பூக்களை விரித்து, முட்களைச் சுமந்தவர்தான் சோபியா ஆன்ரேவேய்னா டால்ஸ்டாய்.

அன்னா கரினீனா நாவலில் அழுத்தமான வரிகள் உண்டு. “எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களுக்கும் காரணிகள் ஒன்று போலவே இருக்கின்றன. மகிழ்ச்சியற்ற குடும்பங்களுக்கு ஒவ்வொருவிதமான காரணிகள் இருக்கின்றன“, இதில் சோபியாவின் திருமண வாழ்வு இரண்டாவதில் அடங்கும். 1862ஆம் ஆண்டு டால்ஸ்டாக்கும், சோபியாவிற்கும் திருமணம் நடந்தேறியது. அப்பொழுது சோபியாவிற்கு 18 வயது. டால்ஸ்டாய் அவரைவிட 16 வயது மூத்தவர். திருமணத்திற்கு முன்னர் டால்ஸ்டாய் தன்னைப் பற்றிய நல்லதும், கெட்டதும் அடங்கிய நாட்குறிப்பேடுகளை சோபியாவிடம் கொடுத்தார். அதை வாசித்து புரிந்து கொண்டு சமம்மதம் தெரிவித்தார் சோபியா. டால்ஸ்டாய் தம்பதியர் பெரும்பாலும் உரையாடியது நாட்குறிப்பின் வழியேதான். இவர்களது வாழ்வில் 13 குழந்தைகளை ஈன்றனர். இதில் 8 குழந்தைகளே பிழைத்தன. 13 முறை மறுபிறவி எடுத்தவர், திருமண வாழ்வில் அவ்வப்போது செத்துப் பிழைத்திருக்கிறார்.

திருமணத்திற்குப் பிறகே போரும் அமைதியும் (1869), அன்னா கரினீனா (1877), புத்துயிர்ப்பு (1899) ஆகிய மகத்தான மூன்ற நாவல்களை எழுதினார் டால்ஸ்டாய். “போரும் அமைதியும்“ “அன்னா கரினீனா“ நாவல்கள் உருவாவதற்கு சோபியாவின் பங்கு அளப்பரியது. இன்னும் குறிப்பாக செல்லுவோமேயானால் டால்ஸ்டாயின் கையெழுத்து தெளிவாக இருக்காது. அவரது எழுத்துக்களில் மிகுந்த இலக்கணப்பிழைகள் அடங்கியிருக்கும். பிழைகள் அனைத்தையும் நீக்கி சோபியாவே தன் கைப்பட தெளிவாக எழுதுவார். இறுதியாக அச்சிற்கு அனுப்பி விடுவார். அச்சேறி வெளிவந்த பின்னரும் மாற்றங்களை உரைத்துக் கொண்டே இருப்பார் டால்ஸ்டாய். சில நேரங்களில்



மாற்றுச் சொற்களையும் தேடித் தேடி மாற்ற முற்படுவார்.

இவற்றைத் தொகுப்பதென்பது எளிமையான காரியம் அல்ல. சோபியா டால்ஸ்டாயின் எழுத்துக் களைச் செப்பனிடுதலில் வல்லவர். இவ்வாறாக, டால்ஸ்டாயின் வெற்றியில் பாதி, அவரது மனைவிக்கும் சேர வேண்டிய ஒன்று. போரும் அமைதியும் என்ற நாவலை மட்டுமே 7 முறை திருத்தி எழுதி பிரதி எடுத்திருக்கிறார் சோபியா. டால்ஸ்டாய், சோபியாவின் அறிவையும் திறமையையும் பாராட்டி மெச்சியதுண்டு. ஆனால், அது பலருக்கும் அறியப்படாமலே போயிற்று.

அர்ப்பணிப்பும் அன்பும் நிறைந்த சோபியாவிற்கு கலை மற்றும் புகைப்படங்கள் மீது தீராத காதல் இருந்தது. ஆனால் அதில் பெரிதும் ஈடுபாடு செலுத்த முடியாமல் போனதற்குக் காரணம், டால்ஸ்டாயின் எழுத்துச் சீரமைப்பு, பதிப்பு ரீதியான வேலைகளுமே. சோபியாவிடம் 16 வயது முதல், அவர் இறக்கும் வரை நாட்குறிப்பு எழுதும் பழக்கம் இருந்தது. அவரின் நாட்குறிப்புகளைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளியாகியிருக்கிறது. இன்றைய நாளில் செல்ஃபி போல, டால்ஸ்டாய் இறப்பதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்னர், சோபியா சுய உருவப்படங்களை எடுக்க ஆரம்பித்தார். சோபியாவின் படங்களைப் பார்க்கையில் அவர் தனிமையின் நிழலில் வெப்பத்தோடு நிற்பது புலப்படுகிறது. டால்ஸ்டாயின் 48 ஆண்டுகால இல் வாழ்க்கையில், அன்பும், வெறுப்பும் அடர்ந்து இருப்பதை சோபியாவின் நாட்குறிப்பிலும் புகைப்படங்களிலும் உணரலாம்.

வீடுகளில் சுடர்மிகு அணையா விளக்காய் ஆண்கள் இருந்தாலும், பெண்களுக்கு போதிய வெளிச்சம் படர் வதில்லை. இது எல்லா காலகட்டத்திலும் அவ் வண்ணமே இயங்குகிறது. டால்ஸ்டாய் தர்ம மனப்பான்மை அதிகம் பெற்றவர். ரஷ்யாவில் ஜார் மன்னர்களின் அடக்கு முறையால் அவதிப்பட்ட 'டுக்கோபோர்ஸ்' என்ற இனத்தைக் காப்பாற்றுவதற்காக எழுதப்பட்ட நாவல் "புத்துயிர்ப்பு". அந்நாவல் எழுதும் முன்பே, அவர் பதிப்பாளர்களிடம் இருந்து பணம் பெற்று, 'டுக்கோபோர்ஸ்' இனத்தைக் காப்பாற்றினார். ஏறத்தாழ நாலாயிரம் மக்களை, தனது மகன் செர்கெய் டால்ஸ்டாய் மூலமாக கப்பல் ஏற்றி கனடா அனுப்பி னார். இதற்கெல்லாம் உறுதுணையாக இருந்தவர் சோபியா.

பல குடுங்களில் பெண்ணின் தியாகமென்பது எட்டா வண்ணமாகவே உருப் பெறுகிறது. டால்ஸ்டாய் தனது இறுதி நாட்களில் அன்பாக ஒரு வார்த்தை கூட தன் மனைவியிடம் பேசியதில்லை. சோபியா மிகுந்த துன்பத்திற்கு உட்பட்டவளாய் இருக்க நேரிட்டது. ஆனால், அனைத்தையும் புறந்தள்ளி, மிகவும் நேர்தியாக டால்ஸ்டாயைப் பார்த்துக் கொண்டார். 1910ஆம் ஆண்டு ஒரு வெண்பனி இரவில் யாருக்கும் சொல்லாமல் தனது 82 வயதில் வெளியே சென்றார் டால்ஸ்டாய். ரெயில் நிலையத்தில் கவலைக்கிடமாக இருந்தவரை, வீட்டிற்கு கொண்டு வந்த பின்னர், உயிர் பிரிந்தது. அவரின் பெயரில் அளப்பரிய அன்பு கொண்ட சோபியா, அவரை ஒரு போதும் அவதிக்குள்ளாகிய தில்லை. 8 குழந்தைகளையும் வளர்த்து, டால்ஸ்ட்டாயின் இலக்கியத் துணையாக விளங்கி, தனது விருப்பு, வெறுப்புகளையெல்லாம் ஒதுக்கி வாழ்ந்த சோபியா, உண்மையில் திருக்குறள் தந்த வள்ளுவரின் இல்லாள் வாசுகியின் மறு வடிவம்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.




## தமிழில் மட்டும்தான்...

**ஆல், அரசு, வேம்பு, அத்தி, மா, பலா, வாழை, பூவரசம் (இன்னும் பல) போன்ற மரங்களின் இலைகளுக்கு மட்டும் 'இலை'என்று பெயர்.**

**அகத்தி, பசலி, வல்லாரை, முறுங்கை போன்றவற்றின் இலை 'கீரை' ஆகின்றது.**

**மண்ணிலே படர்கின்ற கொடிவகை இலைகளுக்குப் 'பூண்டு' என்று பெயர்.**

**அறுகு, கோரை முதலியவைகளின் இலைகள் 'புல்' ஆகின்றன.**

**மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'தழை'.**

**நெல், வரகு முதலியவற்றின் இலைகள் 'தாள்' ஆகும்.**

**சப்பாத்தி, கள்ளி, தாழை இனங்களின் இலைகளுக்குப் பெயர் 'மடல்'.**

**கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகள் 'தோகை' என்றாகின்றது.**

**தென்னை, கமுகு, பனை முதலியவற்றின் இலைகள் 'ஓலை' என்று சொல்லப்படுகின்றன.**

**இவ்வாறு தாவரங்களுக்கு வழங்கி வரும் சொற் களுக்குள்ளே இலக்கணம் மட்டுமல்ல, தாவரவியல் அறிவியலும் அடங்கி இருக்கிறது.**



# உழவர் ஒழிப்புச் சட்டங்கள் பின்னணியில் நீண்டகால சதி



மோடி அரசின் மூன்று உழவர் ஒழிப்பு சட்டங்களுக்கு எதிரான உழவர்களின் போராட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது.

26.01.2021 - இந்தியக் குடியரசு நாளில் தில்லியில் நடந்த பேரெழுச்சியான டிராக்டர் பேரணி உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. அதேநேரம், ஆட்சியாளர்களின் "சாணக்கிய கால" உத்தியும் செயல்படுத்தப்பட்டது.

64 நாட்கள் தில்லி முற்றுகையில் மழையிலும், குளிரிலும் தீர்வு கிடைக்காமல் கொந்தளித்த மனத்தோடு காத்திருந்த உழவர்களின் மனநிலையை பின்புலமாகக் கொண்டு, அமித்சாவின் ஆட்கள் நடத்திய ஆத்திர மூட்டல்கள், சில சிதறலான போராட்டங்களை ஏற்படுத்தியது.

கூட்டுப் போராட்டக் குழுவின் போராட்டத் திட்டங்களைத் தாண்டி தில்லி செங்கோட்டையில் குவிந்து, அந்தக் கோட்டைக் கொத்தளத்தில் தனியாக இருந்த இன்னொரு கொடி மரத்தில் "நிஷான் சாகிப்" என்ற சீக்கியக் கொடியையும், விவசாயிகள் சங்கக் கொடியையும் கட்டினார்கள். அங்கும் உழவர்கள் தரப்பிலிருந்து எந்த வன்முறையும் நிகழ்த்தப்படவில்லை!

சீக்கியர்கள் கலந்து கொள்ளக்கூடிய எல்லா நிகழ்வுகளிலும் இந்த நிஷான் சாகிப் கொடி ஏந்தப்படுவது மிக நீண்டகாலமாக நடந்து வருவதுதான். தலைமையமைச்சர் நரேந்திர மோடிகூட சீக்கியரிடையே விழாக்களில் பங்கெடுத்தபோது, இந்த நிஷான் சாகிப் கொடியை தலைப்பாகையாக அணிந்து கொண்டு கலந்து கொண்டது பலரும் அறிந்ததுதான்.

உழவர்களின் 64 நாள் போராட்டத்திலும் பெரும்பாலான டிராக்டர்களிலும் மகிழுந்துகளிலும், இரு சக்கர ஊர்திகளிலும் உழவர் சங்கக் கொடிகளோடு, இந்தக் கொடியும் பறந்து கொண்டுதான் இருந்தது.

செங்கோட்டையில் குடியரசு நாளில் ஏற்றப்பட்ட இந்தியக் கொடிக்கு எந்த ஊறும், அவமானமும் நிகழ்த்தப்படவில்லை. இதனை போராட்டக்குழு கண்டித்து அறிக்கை விடுத்தது. இது தவறு என்று சுட்டிக்காட்டியது. ஆனால், இதனை "தில்லி வன்முறை" என்றும், இந்தியக் குடியரசுக்கு ஏற்பட்ட அவமானம் என்றும் மிகைப்படக்

கி.வெங்கட்ராமன்

கூறி, போராட்டத்தை சிதறடிக்க வழக்கம்போல் ஆட்சியாளர்கள் முயற்சி செய்கிறார்கள்.

ஜல்லிக்கட்டுக்காக அமைதியாக நடந்த மெரினா போராட்டத்திலும், ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி தூத்துக்குடியில் நடந்த மக்கள் பேரணியிலும், தில்லியில் சாகின்பாக் பகுதியில் மோடியின் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராக நடந்த பெருந்திரள் மக்கள் போராட்டத்திலும் இதே விதமான உத்திதான் அரங்கேற்றப்பட்டது. கண்மண் தெரியாத அடக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

வெளிப்படையாகத் தெரிந்த தீப் சித்து என்ற பா.ச.க. சார்பு நடிகரை போராட்டத்திற்கு உள்ளேவிட்டு அமித் சாவின் முயற்சியில் செங்கோட்டை நிகழ்வு நடந்திருக்கிறது என்ற உண்மை இதைப் பார்க்கிற யாருக்கும் புரியும்.

இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, போராடும் உழவர்களின் தலைவர்கள் சிலர் மீது கொடும் பிரிவுகளின் கீழ் பொய் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இதுவும் "சாணக்கிய கால" பாணிதான்!

இதற்கும் மேல் அப்போராட்டக் களேபரத்தில், ஒரு உழவர் இறந்த செய்தி முதலில் அவர் துப்பாக்கிச் சூட்டில் இறந்ததாக வந்தது. பின்னால், அவர் அங்கு நேர்ந்த தள்ளுமுள்ளுவில் அவர் ஓட்டிவந்த டிராக்டர் கவிழ்ந்து இறந்து போனார் என்று தெரிந்தது. கொந்தளிப்பான சூழலில் வந்த செய்தியை ஊடகத்திலும் சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்து கொண்டவர்கள் எல்லோருமே பிறகு இறப்புக்கான உண்மை செய்தி தெரிந்த பிறகு, அதையும் தங்கள் ஊடகங்களில் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால், இவர்கள் மீதும் கொடும் பிரிவுகளில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுபோதாதென்று, போராட்டப் பாசறைக்குத் திரும்பிய சிங்கு, திக்ரி, காசிப்பூர் பகுதிகளில் திட்டமிட்ட முறையில் அரம்பர்களை (ரவுடிகளை) "பொது மக்கள்" என்ற போர்வையில் ஆட்சியாளர்கள் களமிறக்கி, வன்முறையை ஏவினார்கள். அதை சாக்காக வைத்து, கூட்டத்தைக் கலைப்பது என்ற போர்வையில் போராடும் உழவர்களின் வாகனங்களை அடித்து நொறுக்குவது, பந்தல்களுக்குத் தீ மூட்டுவது என்ற கீழ்த்தரமான வேலைகளில் காவல்துறை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

அதேநேரம், நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் மோடி அரசின் அறிக்கையை முன்வைத்துப் பேசிய இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் இந்த மூன்று சட்டங்களும் உழவர்களுக்கு நன்மையானது என்ற பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தார்,

இந்தியக் குடியரசு நாள் தில்லி டிராக்டர் பேரணி உழவர் போராட்டத்தை இந்திய நாடு தழுவிய அளவில் விரிவாக்கியிருக்கிறது. அதே நாளில், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும், மகாராட்டிரம், கர்நாடகம், கேரளம், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், மேற்கு வங்கம் போன்ற பல்வேறு மாநிலங்களிலும் இதேபோன்ற பேரணிகள்

**மோடி அரசின் உழவர் ஒழிப்புச் சட்டங்களை முறியடிப்பதற்கும் வேளாண்மையை சுற்றுச்சூழலுக்கு இசைவான இலாபமான தொழிலாக மாற்றுவதற்குரிய மாற்றுத் திட்டங்களை முன்வைப்பதற்கும் மக்கள் இயக்கங்கள் முன்வரவேண்டும்.**

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்போடு நடந்தது. போராட்டம் விரிவடைந்து விட்டது.

இந்திய அரசின் சீர்குலைவுகளைத் தாண்டி தில்லி முற்றுகைப் போராட்டம் தொடர்கிறது.

இந்த மூன்று உழவர் ஒழிப்புச் சட்டங்களும், அதற்கும் சற்று முன்னால் வந்த மின்சார திருத்தச் சட்டமும் வேளாண்மையை முற்றிலும் ஒழிப்பதற்கான சட்டங்கள் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். (***காண்க** - 2020 சூன் 2, சூன் 4 ஆகிய நாட்களில் தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் கொடுக்கப்பட்ட அறிக்கை, <u>தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம்</u> - 2020 மே இதழ்*).

உழவர்களை வேளாண்மையிலிருந்து வெளியேற்றிவிட்டு, உழவர்கள் கையிலிருந்து நிலங்களை பெருங் குழுமங்கள் கைக்கு மாற்றிவிடுவது, உள்ளூர் சிறு வணிகர்களை வேளாண் விளைபொருள் வணிகத்தி லிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அவற்றை பெருங் குழுமங்கள் கையில் ஒப்படைப்பது, எளிய மக்களுக்குப் பயன்பட்டு வரும் நியாய விலைக் கடைகளை (ரேசன் கடைகளை) படிப்படியாக மூடிவிடுவது என்பதுதான் இந்தச் சட்டங்களின் உண்மை நோக்கம் என தெளிவாக்கியிருக்கிறோம்.

இச்சட்டங்களை முற்றிலும் திரும்பப் பெற வலியுறுத்தி, காவிரி உரிமை மீட்புக் குழுவும், தமிழ்த் தேசியப் பேரியக்கமும், தமிழக உழவர் முன்னணியும் இடைவிடாமல் போராடி வருகின்றன. பல்வேறு உழவர் இயக்கங்களும் தமிழ்நாட்டில் இதேகோரிக்கையை வலியுறுத்தி, வலுவான தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இவ்வளவுக்குப் பிறகும் மோடி அரசு இச் சட்டங்களைத் திரும்பப் பெறாமல் இருப்பதற்கு வலுவான பின்னணி ஏற்பாடுகள் இருக்கின்றன. நீண்டகாலத் திட்டமிடல்கள் இருக்கின்றன.

உழவர்களின் தில்லி முற்றுகையின் தொடக்க நாட்களிலேயே மத்தியப்பிரதேச உழவர்கள் மாநாட்டில் காணொலி வழியாக 2020 திசம்பர் 18 அன்று பேசிய இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோடி, "நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு கடந்த 25 - 30 ஆண்டுகளாக கடந்த ஆட்சியாளர்கள் செய்யத் தவறியதைத்தான் இப்போது நான் செயல்படுத்துகிறேன்" என்று கூறினார். ஒருவகையில் இது உண்மைதான்!

தாராளமயம், உலகமயம் என்ற பெயரால் உலக வேட்டைமயம் கட்டவிழ்த்து விடப்பட்ட 1991லேயே உலக வங்கி இந்தியா தொடர்பாக வெளியிட்ட விரிவான அறிக்கையிலேயே இது கூறப்பட்டுவிட்டது. அன்றிருந்த நிதி நெருக்கடி, உலக வேட்டையில் இந்தியப் பெரு முதலாளிகள் ஈடுபடுவதற்கான வாய்ப்பு ஆகிய சூழலில் உலக வங்கி 23.08.1991 அன்று இந்தக் கட்டளைகளை இந்திய அரசுக்கு அளித்தது.

"இந்தியா : பொருளியல் பரிந்துரைகள்" (India : Country Economic Memorandum) என்ற பெயரால் 2 தொகுதிகளாக இந்தக் கட்டளைகளை உலக வங்கி இந்திய அரசுக்குப் பிறப்பித்தது. அவற்றுள் தொகுதி 2 - "வேளாண்மை : சவால்களும் வாய்ப்புகளும்" (Agriculture : Challenges and Opportunities) என்பதாகும். இது இவ்வளவு ஆண்டுகள் பாதுகாக்கப்பட்ட கமுக்க ஆவணம் என்று வரையறுக்கப்பட்டு, வெளியிடப்படாமல் இருந்தது. இருபதாண்டுகள் கடந்த நிலையில், தற்போதுதான் 12.06.2020 அன்று இந்த 214 பக்க ஆவணம் வெளியாகியது.

இந்தக் கட்டளைகளை கவனித்தால், படிப்படியாக வேளாண்மை ஒழிப்புச் சட்டதிட்டங்கள் பல்வேறு ஆட்சியாளர்கள் வழியாக நடைபெற்று வருவதைப் புரிந்து கொள்ள முடியும். அவற்றின் உச்சமாகத்தான் இந்த மூன்று வேளாண் ஒழிப்புச் சட்டங்களும் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும்.

உலக வங்கி இந்திய அரசுக்கு முன்வைத்த "பரிந்துரை" என்ற பெயரிலான கட்டளைகள் சிலவற்றைப் பார்த்தாலே இது தெளிவாகும்.

1991இல் உலக வங்கி பிறப்பித்த கட்டளைகளில் சிலவற்றை கீழே தருகிறோம்.

1. வரும் நான்காண்டுகளுக்குள் உர மானியத்தை அறவே கைவிட்டுவிட வேண்டும்.

2. முன்னுரிமைக் கடன்கள் என்ற வகையில் வேளாண்மைக்கு முன்னுரிமை கொடுத்து, கடன் வழங்குவதை விரைவில் நிறுத்திவிட வேண்டும்.

3. பாசனத் தண்ணீருக்குக் கட்டணம் விதிக்க வேண்டும். அதுமட்டுமின்றி, வேளாண்மை விரிவாக்கப் பணிகளையும் கால்நடை விரிவாக்கப் பணிகளையும் கட்டணம் ஏதுமின்றி அரசு செய்வதை கைவிட வேண்டும். உழவர்களிடம் இதற்கான கட்டணங்களைத் திரட்ட வேண்டும்.

4. வேளாண் விளைபொருட்களின் இறக்குமதிக்கு உள்ள கட்டுதிட்டங்களை நீக்கிவிட்டு, வேளாண் விளைபொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். இது சிறிது காலம் பிடிக்கும் என்பதால், முதல் கட்டமாக எண்ணெய் வித்துகள் இறக்குமதியை தாராளமாக்க வேண்டும்.

5. விதைப் பண்ணையிலும், வேளாண் ஆராய்ச்சியிலும் அரசின் பங்களிப்பை படிப்படியாக முற்றிலும் கைவிட்டுவிட வேண்டும். அவற்றில் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்.

**மக்களின் உணவுப் பழக்கம் முற்றிலுமாக மாற்றப் பட்டு இதுவரை இல்லாத புதிய புதிய நோய்களும், அதிலிருந்து தப்பிப்பதற்கான பெருங்குழும மருத்துவ மனைகளும் பெருகிவிட்டன. மண்ணிற்குத் தொடர்பில்லாத இந்த உணவுப் பழக்க மாறுபாடு, மக்களின் இயல்பான தற்காப்பு உடல் நிலையை சீர்குலைத்து, இன்று கொரோனா தாக்குதலுக்கு எளிதில் இலக்காகும் அபாய நிலை ஏற்பட்டுவிட்டது. கம்பெனிகளின் இலாப வேட்டைக்காக வேளாண்மையும் அழிக்கப்பட்டு, மக்களின் உடல்நிலையும் பந்தையப் பொருளாக மாற்றப்பட்டுவிட்டது.**

6. மானிய கட்டணத்தில் வேளாண்மைக்கு மின்சாரம் வழங்குவதைக் கைவிட்டு, வேளாண்மை அல்லாத பிறவற்றிற்கு விதிக்கப்படும் மின்சாரக் கட்டணங்களே வேளாண்மைக்கும் விதிக்கப்பட வேண்டும்.

7. இந்திய உணவுக் கழகம் வேளாண் விளை பொருட்களை நேரடியாகக் கொள்முதல் செய்வதிலிருந்தும், அவற்றை இந்தியாவின் பல்வேறு பகுதி களுக்கு எடுத்துச் சென்று சேமிப்பதிலிருந்தும் படிப் படியாக பின்வாங்கி, அவற்றை தனியார் ஒப்பந்தக் காரர்களுக்கு விட்டுவிட வேண்டும்.

8. முடைக் காலத்திற்கு ஓரளவு உணவு தானியத்தை வைத்திருக்கலாமே தவிர, மற்றபடி உணவு தானிய சேமிப்பிலிருந்து அரசு விலகிவிட வேண்டும். எதிர் பாராத தேவைகள் ஏற்படும் காலத்தில், வெளிநாடு களிலிருந்து உணவு தானியங்களையோ பிற வேளாண் விளை பொருள் களையோ இறக்குமதி செய்து கொள்ள வேண்டும். இதற்குத் தகுந்தாற்போல் அயல் செலாவணிக் கையிருப்பு வைத்திருக்க வேண்டும்.

9. உணவு மானியத்தை பெருமளவு குறைக்க வேண்டும். நியாய விலைக் கடைகளில் (ரேசன் கடைகளில்) மிகவும் தேவைப்படும் ஏழைகளுக்கு மட்டுமே மலிவு விலையில் பொருட்கள் வழங்கலாம். மற்றபடி

*பெரும்பான்மையான மக்கள் வெளிச்சந்தையில் பொருள் வாங்குவதற்கான வழிகளைக் காண வேண்டும்.*

*10. துண்டு துண்டாக பிரிந்திருக்கிற நிலங்களை இணைப்பதற்கும், குத்தகை சாகுபடி தொடர்பான சட்ட திட்டங்களை எளிமையாக்குவதற்கும் வெளிப்படையான வழிமுறைகளை விரைவில் ஏற்படுத்த வேண்டும்.*

மேற்கண்ட உலக வங்கி கட்டளைகளை 1991லிருந்த நரசிம்மராவ் ஆட்சி தொடங்கி அடுத்து சில காலமே இருந்த தேவகௌடா ஆட்சி, அடுத்து வந்த வாஜ்பாய் ஆட்சி, மன்மோகன் சிங் ஆட்சி ஆகியவை படிப்படியாக செயல்படுத்தி வருகின்றன. அவ்வப்போது உழவர் இயக்கங்கள், எதிர்க்கட்சியினர், ஊடகங்கள் ஆகியோரின் எதிர்ப்பு காரணமாகவும், கூட்டணி இழுபறிகள் காரணமாகவும் உலக வங்கி விரும்பிய வேகத்தில் செயல்படுத்த முடியவில்லையே தவிர, இரண்டடி முன்னேறி ஓரடி பின்வாங்குவது என்ற வகையில் ஒவ்வொரு ஆட்சியிலும் இந்த உழவர் பகை - மக்கள் பகைச் சட்டங்கள் படிப்படியாக செயல்படுத்தப்பட்டே வருகின்றன. அதன் ஒரு உச்சமாக, இன்று மோடி ஆட்சி கொடிய சட்டங்களைப் பிறப்பிக்கிறது.

1993லிருந்தே ஒவ்வொரு வரவு செலவு அறிக்கையின் போதும், இடைப்பட்ட காலத்தில் அறிக்கைகளின் வாயிலாகவும் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களின் மீதான மானியம் வெகுவாக வெட்டப்பட்டு விட்டது.

“வேளாண்மை” என்ற வரையறுப்பில் உணவுப் பதப்படுத்துதல், டிராக்டர் உள்ளிட்ட உழுவை எந்திரங்கள், சிலவகை பூச்சிக் கொல்லிகள் தயாரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோரையும் இணைத்துக் கொண்டதற்குப் பிறகும் கூட, கடந்த முப்பதாண்டுகளில் வேளாண்மைக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் அளவு படிப்படியாக குறைந்து வருகிறது. அவற்றின் விளைவாகத் தான், தனியார் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் வாங்கி சாகுபடி செய்துவிட்டு, வேளாண்மை பொய்த்துப் போகிற காலங்களில் கடனைத் திருப்ப முடியாமல் மானத்திற்கு பயந்து உழவர்கள் தொகை தொகையாகத் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்தது.

இந்த உண்மை வெளியுலகத்திற்குத் தெரியாமல் இருப்பதற்காக வேளாண்மை சிக்கல் காரணமாக தற்கொலை செய்து கொள்ளக்கூடிய உழவர்களின் எண்ணிக்கையை மறைப்பதை திட்டமிட்ட செயலாகவே அரசின் புள்ளி விவரத்துறை செய்து வருகிறது.

வேளாண்மை விரிவாக்கப் பணி என்பதிலிருந்து அரசுகள் கிட்டத்தட்ட முற்றிலும் விலகி விட்டன.

உலக வங்கி கட்டளை செயலுக்கு வந்த 1993ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, இந்தியாவின் உணவு எண்ணெயத் தேவைகளில் 95 விழுக்காடு உள்நாட்டு உற்பத்தியிலிருந்தே கிடைத்தன. அந்தந்த மண்ணில் உற்பத்தியான தேங்காய் எண்ணெய், நல்லெண்ணை, கடலை எண்ணெய், கடுகு எண்ணெய் போன்றவற்றை மக்கள் பயன்படுத்தி வந்தார்கள்.

இந்த நிலையை தலைகீழாகப் புரட்டிப்போடும் வகையில் பாமாயில், சூரிய காந்தி எண்ணெய், சோயா எண்ணெய் போன்றவை மிகப்பெரும் அளவில் தாராள மாக இறக்குமதி ஆவது 1993ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடங்கியது. இன்று இந்தியாவின் ஒட்டுமொத்த உணவு எண்ணெய் தேவையில் ஏறத்தாழ 80 விழுக்காடு இறக்குமதியைச் சார்ந்தே இருக்கிறது.

உள்நாட்டிலும் சூரிய காந்தி, சோயா போன்ற வற்றைப் பயிரிடுவதற்கு வலியுறுத்தப்பட்டதால், பன்னாட்டு விதைக் கம்பெனிகளைச் சார்ந்து இப்பயிர்கள் சாகுபடி செய்வது அதிகரித்துவிட்டது.

மக்களின் உணவுப் பழக்கம் முற்றிலுமாக மாற்றப் பட்டு இதுவரை இல்லாத புதிய புதிய நோய்களும், அதிலிருந்து தப்பிப்பதற்கான பெருங்குழும மருத்துவ மனை களும் பெருகி விட்டன. மண்ணிற்குத் தொடர் பில்லாத இந்த உணவுப் பழக்க மாறுபாடு, மக்களின் இயல்பான தற்காப்பு உடல் நிலையை சீர்குலைத்து, இன்று கொரோனா தாக்குதலுக்கு எளிதில் இலக்காகும் அபாய நிலை ஏற்பட்டுவிட்டது. கம்பெனிகளின் இலாப வேட்டைக்காக வேளாண்மையும் அழிக்கப்பட்டு, மக்களின் உடல்நிலையும் பந்தையப் பொருளாக மாற்றப்பட்டுவிட்டது.

வேளாண்மையிலும் குறிப்பாக, விதை ஆராய்ச்சி யிலும் மான்சாண்டோ, சின்ஜென்டா, பாயர் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் கடைவிரித்துவிட்டன. அரசு பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகிய வற்றில் இந்த பன்னாட்டு நிறுவனங்களின் ஊடுருவல் மிகப்பெரும் அளவுக்கு விரிவடைந்துவிட்டது. இன்று கிட்டத்தட்ட அரசு ஆராய்ச்சி நிறுவனமே இல்லை என்ற நிலைக்கு போய்விட்டது. இவற்றின் விளைவாக மரபீனி மாற்ற விதைகள் முறையான இசைவு இல்லாமலேயே சந்தைக்குப் புழக்கத்தில் வந்துவிட்டன. பி.ட்டி. பருத்தி இதற்கொரு எடுத்துக்காட்டாகும்!

அதுமட்டுமின்றி, பல்கலைக்கழகங்களிலிருந்து படித்து விட்டு வெளியில் வரும் மாணவர்கள் பெருங் குழுமங் களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை மட்டுமே பெற்றவர்களாக மாற்றப்பட்டுவிட்டார்கள். இவர்கள் வழியாக எல்லா ஆய்வுக் கூடங்களும் பெருங்குழும “பொரு ளியல் அடியாட்களால்” நிரப்பப் பட்டு விட்டன. ஒட்டு மொத்த ஆய்வுச் சூழலும் பெருங் குழுமங்களின் தேவைக் கேற்ப வடிவமைக்கப்பட்டு விட்டது.

மக்கள் சார்பான, சூழலுக்கு இசைவான வேளாண் ஆய்வு என்பது, அரசு அங்கீகாரம் பெற்ற பெரிய பெரிய ஆய்வு நிறுவனங்களுக்கு வெளியில்தான் நடத்தப்பட வேண்டியதாகிவிட்டது.

வேளாண்மைக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம் முதல் முதலில் தமிழ்நாட்டில்தான் தொடங் கியது. உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி அவர்கள்

தலைமையில் 1970களின் பிற்பகுதியிலும், 80களின் தொடக்கத்திலும் உழவர்கள் நடத்திய பேரெழுச்சியான போராட்டங்களும் பெரும் ஈகங்களும் பெற்றுத் தந்த உரிமைதான் கட்டணமில்லாத மின்சாரம் ஆகும். அது

படிப்படியாக பல்வேறு மாநிலங்களுக்கும் விரிவடைந்தது. அதுமட்டுமின்றி, குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு, முதல் 100 அலகுகளுக்கு கட்டணமில்லா மின்சாரம் போன் றவை தமிழ்நாட்டில் வளர்ந்தது.

இந்தப் போக்கை படிப்படியாக நிறுத்துவதற்கு ஒவ்வொரு ஆட்சிக் கட்டத்திலும் சட்டதிட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. மின்சார உற்பத்தி, அரசுத் துறை யிலிருந்து தனியார் நிறுவனங்களுக்குக் கிட்டத்தட்ட முழுமையாக மாற்றப்பட்டுவிட்டது. இப்போது, மின்சார வழங்கலையும் தனியார் பெருங்குழுமங்களுக்கு வழங்குவ தற்கும் மின்சாரம் தொடர்பாக மாநில அரசுகளுக்கு உள்ள அதிகாரத்தைப் பறிக்கும் வகையிலும் கட்டண மில்லா மின்சாரத்தை முற்றிலும் நிறுத்தும் வகையிலும் புதிய மின்சாரத் திருத்தச் சட்டத்தை மோடி அரசு முன் வைத்துள்ளது.

தேவகௌடா தலைமையமைச்சராக இருந்த காலத்தில், தமிழ் மாநிலக் காங்கிரசு சார்பில் ப. சிதம்பரம் நிதியமைச் சராக இருந்தபோதுதான் குடும்ப (ரேசன்) அட்டைகள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்போர், வறுமைக்கோட் டிற்கு மேல் இருப்போர் என்று பிரிக்கப்பட்டு பெருந் தொகையான மக்கள் நியாய விலைக் கடைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். தமிழ்நாடு, கேரளம் ஆகிய ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர பெரும்பாலான மாநிலங்களில் அப்போதே அது செயலுக்கு வந்துவிட்டது.

**ஒப்பந்தப் பண்ணையச் சட்டத்தில் உழவர்களின் நிலம் பெருங்குழுமங்களுக்குப் போய்விட முடியாதபடி திருத்தம் செய்கிறோம் என்று பேச்சுவார்த்தையின் போது மோடி அரசு கூறியதெல்லாம் வெறும் மாய்மாலமாகும்! ஒப்பந்தப் பண்ணையச் சட்டத்தில், இல்லாத ஒன்றை நில வங்கி சட்டத்தின் மூலம் செய்து கொள்வார்கள்.**

தமிழ்நாட்டில், மக்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் அழுத்தம் காரணமாக இன்று வரையிலும் கிட்டத்தட்ட அனைவருக்கும் நியாய விலைக்கடை வாய்ப்பு தொடர் கிறது.

இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நியாய விலைக் கடைகளிலிருந்து வெளியே வைக்கப்பட்டதால், இந்திய உணவுக் கழகக் கிடங்குகளில் கொள்முதலான உணவு தானியங்கள் பெருமளவு தேங்கி அழுகத் தொடங்கின.

அதையே தங்கள் திட்டங்களை செயல்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பாக மாற்றுவதற்கு 2000த்தில் வாஜ் பாய் ஆட்சி அபிஜித்சென் என்ற ஆய்வாளர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 2002இல் தனது பரிந்துரையை அரசுக்கு அளித்த அபிஜித்சென் குழு, “இந்த நெருக்கடியே நம் திட்டங்களை செயல் படுத்துவதற்கான புதிய வாய்ப்பாகும்” என்று வெளிப் படையாக அறிவித்தது.

அரசுக் கொள்முதலை பெருமளவு குறைப்பதற்கும் வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டு மென்றும், நியாய விலைக் கடைகளை பெருமளவு சுருக்குவதற்கும் பரிந்துரைகளை முன்வைத்தது.

ஆயினும், வாஜ்பாய்க்குப் பிறகு பா.ச.க. தேர்தலில் தோற்றதற்கு வேளாண்மை தொடர்பான, பொது வழங்கல் தொடர்பான கொள்கைகளும் ஒரு முக்கிய காரணம் என உணரப்பட்டதாலும் அதற்குப் பிறகு வந்த மன்மோகன் சிங் ஆட்சி கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைச் சார்ந்திருந் ததாலும் உலக வங்கியின் கட்டளை கள் செயல்படுவது சற்றுத் தொய்வு நிலையில் இருந்தது.

ஆயினும், மன்மோகன் சிங் ஆட்சியில் வேளாண் மானியம் குறைப்பு, நேரடியாக கட்டணமில்லா மின்சாரம் வழங்குவதற்குப் பதிலாக வங்கிக் கணக்கில் பணம் போடுவது போன்றவை செயலுக்கு வந்தன. தமிழ் நாட்டில் செயலலிதா ஆட்சியிலும் அவ்வாறான முயற் சிகள் நடந் தாலும், உழவர்களின் எதிர்ப்பு காரணமாக மிக விரைவி லேயே அந்த உழவர் பகைத் திட்டங்கள் திரும்பப் பெறப் பட்டன.

இந்நிலையில், 2014இல் மோடி ஆட்சி சாந்தக்குமார் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமர்த்தி இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகள், நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தது.

சாந்தக்குமார் குழு இந்திய உணவுக் கழகத்தை முற்றிலும் கலைத்து விடுவதை இலக்காகக் கொண்டு, முதல் கட்டமாக இந்திய உணவுக் கழகத்தை சுதந்திரமான ஐந்து மண்டலக் கழகங்களாகப் பிரிப்பது, வாய்ப்பான மண்டலக் கழகங்களை பெருங்குழுமமயமாக்குவது, நியாய விலைக் கடைகளை மூடிவிட்டு அதற்குப் பதிலாக உணவுக் கூப்பன்களையோ நேரடி பணம் வழங்கலையோ மேற்கொள்வது ஆகிய பரிந்துரைகளை முன்வைத்தது.

தொடரும்...

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# நெருப்புக்கு வெளிச்சம் பாய்ச்சியவன்

**கவிபாஸ்கர்**

*(செங்கிப்பட்டி – சாணூரப்பட்டியில் 29.1.2021 அன்று தழல் ஈகி முத்துக்குமார் நினைவேந்தல் ஒன்றுகூடலில் வழங்கிய கவிதையின் ஒரு பகுதி)*



ஆரியத்தைச் சீறிச் சினந்து;
செவிட்டில் அறைந்து
திராவிடத்தின் தில்லு முல்லை
கிழித்து எறிந்து

தமிழ்த்தேசியம் எனும்
தத்துவக் கோட்பாட்டை
பெத்துப் போட்ட எங்கள்
ராஜபாட்டை தலைவர் பெ.ம.
பிறந்தமண்! இது..!

இந்த மண்ணில்
துளிர் விட்ட ஆலமரத்தின்
ஆணிவேர்தான்
இன்று உலகெங்கும்
கிளைத்து நிற்கிறது
தமிழ்த்தேசியத் தத்துவமாய்!

தலைவர் பிறந்த மண்ணில்
இளைய பிள்ளைகள் நாங்கள்
கவிதை பாட வந்ததில்
மகிழ்ச்சி கொள்கிறோம்!

விளை நிலத்தை
விலைக்குத் தருகிற
உழவர்களுக்கு நடுவில்
முத்துக்குமார்
சிலைக்கு நிலம் தந்த
புலவர் இரத்தினவேலருக்கு
எமது பேரியக்கம் எப்போதும்
பேரன்பைச் சொல்லும்!

நெருப்பின்முதல்வெளிச்சம்
எரிந்து போயிற்று
புதியவெளிச்சத்தைப்
பாய்ச்சியவன்
முத்துக்குமார்!

முத்துக்குமார்
போலித் தலைவர்களுக்காக
தீக்குளித்தவனில்லை
தமிழர் தலைமுறைக்காக
தீக்குளித்தவன்!

சொந்த நாட்டில் வாழ
வழியில்லாமல்
தீக்குளிக்கவில்லை
தமிழனுக்கு
சொந்தநாடு
இல்லையே எனத்
தீக்குளித்தவன்!

அவன் எழுதிய கடிதம்
அரசியல் உரைகல்
அவனுக்கு வைத்த சிலை
தமிழரின் நடுகல்

வீதியில் நின்று
விடுதலைக்கு வழிகாட்டும்
தழல் ஈகி முத்துக்குமாருக்கு
எமது வீரவணக்கம்!

வீட்டின்
வெளிபுறக் கதவை பூட்டி
கொல்லை புறத்தில் நுழைந்து
கொள்ளையடித்துச் செல்லும்
திருடனைப்போல்

கொரோனா ஊரடங்கில்
மக்களை வீட்டிற்குள்
வைத்துபூட்டி
நாட்டிற்குள்
பல சட்டங்களைப் போட்டு
கொள்ளையடிக்கத் துணிந்தன
சங்கிகள் கூட்டம்!

இப்போது
கார்ப்பரேட்டு
காட்டுமிராண்டிகளுக்காக
எங்களைத்
தாய் நிலத்திலிருந்து
நீக்க நினைக்கிறாய்!

நீக்கு..
எங்கள் நிலத்திலிருந்து அல்ல!
உனது
போலித் தேசத்திலிருந்து
எங்களை நீக்கு!

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.





# திரைப்படை இசைக்கலைஞர் சங்கத்தின்

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாராக தேர்ந்தெடுக்கப்பட்ட

திரு. **தினா**, திரு. **ஜோனா பக்த குமார்**

திரு. **மகேஷ்** ஆகியோரை

## செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

வாழ்த்துகிறது!

சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு ஆதரவாகவும் நிர்வாகத்தில் நேர்மையாகவும் செயல்பட வாழ்த்துகள்!



விசவனூர் வே. தளபதி
தலைவர்



ரங்கநாதன்
செயலாளர்



இமயவரம்பன்
பொருளாளர்